Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசியதினசரி National Tamil Daily

மலர் 8 (29-11-66) இதழ் 289

பராபவ ஷஃபான் 15 கார்த்திகை 14 செவ்வாய்க்கிழமை

# பூரி சங்கராச்சாரிய சுவாமிகள் விடுதலை செய்யப்பட்டார்

புதுடில்லி, நவ 28

புதுச்சேரியில் காவலில் வைக்கப்பட்டிருந்த பூரி சங்கராச்சாரிய சுவாமிகள் இன்று காலை சென்னைக்குக் கொண்டுவரப்பட்டு பின் பூரிக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு அவர் விடுதலை செய்யப்பட்டார்.

பூரி சுவாமிகள் இம்மாதம் 23-ம் திகதி டில்லியில் கைது செய்யப்பட்டார்.

பசு வதையை சட்ட மூலம் தடை செய்யக்கோரி சாகும்வரையிலான உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்தபோதே பொலிசார் அவரைக் கைதுசெய்தனர்

தலைநகரின் சட்ட ஒழுங்குக்குக் குந்தகம் விளைக்கும் எனக் கருதப்பட்டதாலேயே பொலிஸார் அவரைக் கைதுசெய்திருந்தனர் என உள்துறை மந்திரி சவான் இதுசம்பந்தமாக அறிவித்திருந்ததும் தெரிந்ததே.

சுவாமிகள் இன்னமும் உண்ணாவிரதத்தைக் கைவிடவில்லையெனவும் தொடர்ந்து ஒன்பதாவது நாளாக இன்று உண்ணாவிரதம் அனுஷ்டித்துக் கொண்டிருந்தாரெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பூரி சங்கராச்சாரியார் கைதுசெய்யப்பட்டதை ஆட்சேபித்து பல இந்து மதஸ்தாபனங்கள் ஆட்சேபம் தெரிவித்து வந்ததும் லண்டன் உட்பட வெளிநாடுகளிலுள்ள இந்து மதத்தவர்கள் இதற்கு ஆட்சேபம் தெரிவித்து அவரை விடுதலை செய்யும்படி இந்திய அரசாங்கத்தைக் கேட்டிருந்ததும் தெரிந்ததே

# மாவட்ட சபைகள்பற்றி நடந்தவாக்கு வாதம்

## ஆளும்கட்சி கூட்ட தகராறு; திரு. தேவநாயகம் விளக்கம்

கொழும்பு திங்கள்

தமிழரசுக் கட்சிக் காரியதரிசியும், வட்டுக்கோட்டை எம். பி.யுமான திரு. அ. அமிர்தலிங்கத்துக்கும், கல்குடா எம். பி. திரு. கே. டபிள்யு. தேவநாயகத்துக்கும் இடையில் சென்ற 23-ந் திகதி நடைபெற்ற அரசாங்கக் கட்சிக் குழுக் கூட்டத்தில் ஏற்பட்ட வாக்குவாதம் பற்றி கல்குடா எம.பி. இப்போது ஒரு விளக்கம் தெரிவித்துள்ளார். இதன்மூலம் திரு. அமிர்தலிங்கத்துக்கும் தனக்கும், அரசாங்கக் கட்சிக் குழுக் கூட்டத்தில் காரசாரமான வாக்குவாதம் நடைபெற்றது உண்மையென்பதை அவர் முதல் தடவையாக வெளியிட்டிருக்கிறார்.

அரசாங்கக் கட்சிக்குழுக் கூட்டத்தில் இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் பற்றி வெளிவந்த செய்திகள் சம்பந்தமாக விளக்கம் கொடுத்து திரு. தேவநாயகம் பத்திரிகைகளுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

மாவட்டசபைகள் பற்றித் தாம் குறிப்பிட்டபோதே தமக்கும் திரு. அமிர்தலிங்கத்துக்கும் வாக்கு வாதம் ஏற்பட்டதாக அவர் தெரிவிக்கிறார்.

மக்களுக்கு மிகமிக அவசியமாக இன்று உணவும், உடையும் இருப்பதால் இத்தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்

(8-ம் பக்கம் பார்க்க)

## ஆஸ்பத்திரி ஆய்வுகூட நுண்கலைஞர் வேலைநிறுத்தம்

### நோயாளர் கஷ்டம்

யாழ்ப்பாணம், செவ்.

அகில இலங்கை வைத்திய ஆய்வு கூட நுண்கலைஞர் இன்று இலங்கை முழுவதிலும் வேலைநிறுத்தம் செய்துள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, காங்கேசன்துறை, பருத்தித்துறை, சாவகச்சேரி மல்லாகம் வவுனியா ஆகிய இடங்களிலுள்ள அரசினர் ஆஸ்பத்திரிகளில் வேலை செய்யும் வைத்திய ஆய்வுகூட நுண்கலைஞர் வேலைநிறுத்தம் செய்துள்ளனரென அறிவிக்கப்பட்டுள்ளது

சம்பள முரண்பாடு நிவர்த்தி செய்தல், விசேஷபதவிகளைக் கூட்டுதல், சுகாதார இலாகாவிலுள்ள மற்றைய பதவிகளுடன் ஒருமுகப்படுத்த நிதி ஏற்பாடு செய்தல், ஆபத்துப்படி வழங்குதல், உயர்படிப்புப்பயில சந்தர்ப்பமளித்தல் போன்ற கோரிக்கைகளை யொட்டியே தற்போதைய வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் நடாத்திய பின்னர் ஒருவித பயனுமில்லாததாலேயே இவ்வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டதென்றும் தங்கள் தொழிற்சங்கத்தில் ஏறக்குறைய 400 உறுப்பினர்கள் உள்ளனரென்றும் இன்றைய வேலைநிறுத்தத்தினால் அரசாங்க ஆஸ்பத்திரிகளின் நிலைமை பெரிதும் பாதிக்கப்படுமென்றும் யாழ்ப்பாண கிளையைச் சேர்ந்த தொழிற்சங்கவாதியொருவர் குறிப்பிட்டார்.

இன்றைய வேலைநிறுத்தத்தினால் ஆய்வு கூடங்களும் வைத்திய நிபுணர்களும், தனியார்துறை டாக்டர்களும் பெரிதும் பாதிக்கப்படுவர். ஆய்வுகூட நுண்கலைஞர்கள் அறிக்கைகள் இல்லாது டாக்டர்கள், நோயாளர்களின் நோயை கண்டுபிடிக்க முடியாதென்றும் சரியான முறையில் சிகிச்சை செய்யமுடியாதென்றும் கூறப்படுகிறது. ஆய்வுகூட நுண்கலைஞர் நோயாளிகளின் உயிர்களைப் பாதிக்கக்கூடிய வேலைகளில் ஈடுபட்டிருப்பதால் அவர்களின் பணிகள் எக்காரணம் கொண்டும் பின்போடமுடி

(8-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு நகரில் நடந்தது

## பணப்பையை பறிக்க துப்பாக்கியால் சுட்டனர்

### ஆனல் வேலைக்காரன் விட்டுக்கொடுக்கவில்லை

கொழும்பு, திங்கள்

ரூ. 31 ஆயிரம் பணத்துடன் சென்றுகொண்டிருந்த ஒருவர் கொழும்பு நகரில் சுடப்பட்டார்.

இந்தச் சம்பவம் கொழும்பு 'மெர்க்கண்டைல்' வங்கியின் முன் நடைபெற்றது. மொரட்டுவையைச் சேர்ந்த தவறணைக்காரரான திரு. எச். ஆர். பொன்சேகா என்பவர் கையில் பணப் பையுடன் தமது வேலைக்காரச் சிறுவனுடன் போய்க்கொண்டிருந்தபோது டாக்ஸி ஒன்று அவர் அருகில் வந்து நிறுத்தப்பட்டதாகவும் அதில் இருந்த மூன்று நபர்களில் ஒருவர் பொன்சேகாவின் கையிலிருந்த பணப் பையைப் பறிக்க முயன்றதாகவும் ஆனல் அவர் பறிப்பதற்கு இடம் கொடுக்கவில்லையென்றும், அதனைத் தொடர்ந்து திரு பொன்சேகா துப்பாக்கியினால் சுடப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

பொன்சேகா சுடப்பட்டவுடன் உடன் இருந்த பையன் பணப் பையைத் தூக்கிக்கொண்டு ஓடி எதிரே வந்த குதிரைப் பொலிஸ் அதிகாரியிடம் கொடுத்ததாகவும் அவர் அதைப் பொலிசில் ஒப்படைத்ததாகவும் கூறப்படுகின்றது. சுடப்பட்டவரின் நிலை கவலைக்கிடமாக இருக்கின்றது. பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்

(8-ம் பக்கம் பார்க்க)

## 3-வது கிரிக்கட்டெஸ்ட்

## இலங்கை தோல்வி

கராச்சி, நவ. 28

பாகிஸ்தானுக்கும் இலங்கைக்குமிடையில் இங்கு நடைபெற்ற 3-வது டெஸ்ட் கிரிக்கட்போட்டியின் இறுதி நாளான இன்று பாகிஸ்தான் 1 இன்னிங்ஸ் 35 ரன்களால் இலங்கையைத் தோற்கடித்தது.

முதல் இன்னிங்ஸில் இலங்கை எல்லா விக்கட்டுகளையும் இழந்து 270 ரன்கள் எடுத்திருந்தது. இலங்கைக் கோஷ்டியின் தலைவர் திரு. மைக்கல் திஸ்ஸேரா கடைசி நேரத்தில் 120 ரன்கள் எடுத்தபோதிலும் இலங்கை தோல்வியுற்றது.

# 2 பேர் மரணம்: 7 பேருக்குகாயம் 8 ஆயிரம்பேர் வீடுகளை இழந்தனர்

## தமிழ்நாட்டில் மீண்டும் புயல் சேதம்

சென்னை, நவ. 28

வங்காளக்குடாவில் உருவான புயல் இன்று காலையில் சென்னை நகரைத் தாக்கியது. மணிக்கு 95 கிலோமீட்டர் வேகத்தில் இப்புயல் வீசியது.

இந்தப் புயலினால் இரண்டு பேர் மரணமானதாகவும் ஏழு பேர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டது. சுமார் எட்டாயிரம் பேர் வீடுவாசல்களை இழந்துள்ளார்கள்.

இந்த மாதத்தில் தமிழ் நாட்டை தாக்கியுள்ள மூன்றாவது புயல் இதுவாகும்.

ஏற்கனவே எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்ததால் புயலினால் அதிக சேதம் இல்லையென்று தெரிகின்றது. பள்ளிக்கூடங்களும், நீதிமன்றங்களும் இன்று மூடப்பட்டிருந்தன. ரயில் சேவை நிதானமாகவே நடைபெற்றது.

சிவசண்முகபுரம் என்ற இடத்தில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 7 பேர் காயமடைந்தார்கள். துறைமுகத்தில் நின்ற கப்பல்களில் 15 கப்பல்கள் பாதுகாப்பான இடங்களில் ஏற்கனவே நிறுத்தப்பட்டிருந்ததால் சேதமின்றி தப்பின. முன்னர் அடித்த புயலால் தரைதட்டி நின்றுகொண்டிருந்த கப்பல் ஒன்று இரண்டாகப் பிளந்துபோயிற்று.

இன்று பிற்பகல் மீண்டும்

(8-ம்பக்கம் பார்க்க )

## ஆழ்கடலில் 18 தினங்கள் தத்தளித்த நால்வரில் ஒருவரைப் பலிகொடுத்து முல்லைத்தீவு திரும்பிவந்துள்ள மூன்று மீனவரின் துயர அனுபவங்கள்

5-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

**வீடு**
வேம்படி, சுண்டிக்குளிப் பகுதிகளில் நவீன வசதியுடன் வீடு வாடகைக்கு தேவை. விபரங்களுக்கு, விளம்பர இல: 2020 'ஈழநாடு' மே/பா என எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். 2020

### வாடகைக்கு

**வளவு**
338-ம் நம்பர் ஆஸ்பத்திரி வீதியில் இருக்கும் வளவு 8 பரப்பு குத்தகைக்கு கொடுக்கப்படும். விபரங்கட்கு: 856, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1180

**வீடு**
122-ம் இலக்க கோவில் வீதி, நல்லூர். 8 படுக்கை அறை எல்லா வசதிகளுடனும், வாடகைக்கு உண்டு. விபரங்கட்கு: கு. மாணிக்கவாசகர், 1-ம் கட்டை, கொறப்பத்தான ரோட், வவனியா அல்லது 100, மணிக்கூடு வீதி, யாழ்ப்பாணம். 1179

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்றறிக்கை இலவசம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று விருத்தியுள்ளனர். இந்த டாக்டர் கர்பூரானந்தர் J. P. கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

**கோழிகள்**
ஆர் ஐ. ஆர். (R. I R) ஒஸ்ரொலொப் (Austrolop) சசெக்ஸ் (Sussex) பன்ரம்ஸ் (Bantams) ஆகிய இனக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. விலை விபரம் நேரில். இ. பரம்சோதி, C/o வே. க. இராசலிங்கம், 'வசந்தம்' மானிப்பாய். 2018

### காணவில்லை

**ரலி சைக்கிள்**
காரைநகர் துறைமுகத்தில் சென்ற சனிக்கிழமை காலை DF 9755 இலக்கமுடைய ரலிசைக்கிள் கைமாறி DD 19695 இலக்கமுள்ள ரலி சைக்கிள் என்னிடம் வந்துவிட்டது. சைக்கிள் மாற்றப்பட்டவர் தயவு செய்து என்னை சந்தித்து சைக்கிளை மாற்றிக்கொள்ளலாம்.—வி. தெய்வேந்திரம், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், துறைமுகம், காரைநகர். 2019


**நியூ காலிங்கன்**
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எம். ஜி. ஆர்.—சாவித்திரி
நடித்த
**வேட்டைக்காரன்**


**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-40
போயா தினங்களில் 4 காட்சிகள்
எம். ஜி. ஆர் - சரோஜாதேவி
நடித்த
**பாசம்**

**யாதவா**
(மூளாய்)
தினசரி 6-30, 9-30
விடுமுறை நாட்களில் 2-30 மணி
M. R. ராதா - M. N. ராஜம்
நடித்த
**ரத்தக்கண்ணீர்**

**REGAL—JAFFNA**
NOW SHOWING
Sophia Loren
Paul Newman
in
LADY L
(Adults Only)

**3வது வெற்றி வாரம்!**

கிங்ஸ்லி (கொழும்பு) — பிளாஸா (வெள்ளவத்தை) — நவா (கொட்டாஞ்சேனை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) — விஜயா (மட்டக்களப்பு) — ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)
மொடேர்ண் (பண்டாரவளை) — மொடேர்ண் (பதுளை) — விஜிதா (ஹட்டன்)



**சிவாஜி கணேசன், தேவிகா**
சந்திரபாபு, புஷ்பலதா, அசோகன், பாலாஜி,
நாகையா, ஏ. வி. எம். ராஜன்
ஜாவர் சீதாராமன், பி. எஸ். வீரப்பா
நடிக்கும்
# ஆண்டவன் கட்டளை
இசை: விஸ்வநாதன் இராமமூர்த்தி
டைரக்ஷன்: சங்கர்


## "சட்டம் நிறைவேறு முன் அமைச்சருக்கு அவசரமேன்?"

திருநெல்வேலி, திங்கள்

"கல்வித் திட்டத்தை உருவாக்கி அதைப் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துக்குக் கொண்டு வருவதற்கு முன்னரே அதை நடைமுறைக்குக் கொண்டுவர கல்வி அமைச்சர் திரு. இரியகொல்ல அவசரப்படுகின்றார். பொதுமக்களதும், ஆசிரியர்களதும் அபிப்பிராயத்தைப்பூரணமாக அறிந்த பின்னரே அமைச்சர் தனது திட்டங்களை அமுலுக்குக் கொண்டுவர வேண்டும்."

மேற்கண்டவாறு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெற்றவலிகாமம் கிழக்கு தமிழாசிரியர் சங்கக் கூட்டத்தில் அதன் தலைவர் திரு. கே. ஆர். குமாரசாமி பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர்தொடர்ந்து பேசுகையில், ஆசிரியர்களைப் பற்றிய குறைகளையே பொதுவாக கல்விஅமைச்சர் நாடெங்கும் கூறி வருவதாகவும் இதனால் பொதுமக்கள் மத்தியில் ஆசிரியர்கள் பற்றிய தப்பான எண்ணங்களே உள்ளதாகவும் ஆசிரியர்களைப்பற்றிய நல்லெண்ணங்களைப் பொதுமக்களிடையே உண்டாக்க அமைச்சர் பாடுபடவேண்டும் என்றும் தெரிவித்தார்.

ஒவ்வொருவரதும் தாய் மொழியே போதனாமொழியென்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டதோடு இவ்வொவ்வொரு தமிழாசிரிய கிளைச் சங்கங்களும் தங்கள் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் மூலம் அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவரல்வேண்டும் என்றும் தலைமைச் சங்கம் அரசாங்கத்துடன் இதுவிஷயமாக நேரடித் தொடர்பு கொள்ளும் என்றும்தெரிவிக்கப்பட்டது.

## நிதி மந்திரியை சந்திப்பர்

உடுப்பிட்டி, திங்கள்

தமிழ் கூட்டுறவு பரிசோதகர்கள் சிங்களத்தில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டுமென்ற உத்தரவு நியாயமற்றதென்றும், தமக்குச் சிங்களத் தேர்ச்சி தேவையில்லையென்றும், இலங்கை கூட்டுறவு ஆய்வாளர் சங்கம் நிதிமந்திரி திரு. யு பி. வன்னிநாயக்காவைச் சந்தித்துச் சுட்டிக்காட்ட விருக்கின்றது. திருவாளர்கள் மு. ஜெயராசசிங்கம், ஆர். ஜேசுதாசன் ஆகியோர் மேற்படி சங்கத்தின் சார்பில் வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் தலைமையில் இம்மாத இறுதிக்குள் நிதிமந்திரியைப் பேட்டிகாணுவர் என அறியப்படுகிறது. இத்தூதுகோஷ்டி தமது சங்க அங்கத்தவர்களின் கஷ்டங்களை நீக்குமாறு நிதிமந்திரியை வேண்டிக் கொள்வர் எனவும் தெரியவருகிறது.


## வானொலி
### கொழும்பு
**செவ். 29-11-66**

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**844 மீற்றர் & 61 மீற்றர்**
காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை 7-15 திருப்பாடல்கள், 7-30 குரல் வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**844 மீற்றர் & 49 மீற்றர்**
பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்ப இசை.

**844 மீற்றர் & 61 மீற்றர்**
மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 வளரும்பயிர்.
இரவு 6-10 கிராமச் செய்திகள், 6-15 கிராமசங்கீதை, 6-45 வீணை இராஜேஸ்வரி சோமசுந்தரம், 7-15 பேச்சு, 7-30 குதூகலம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 நாதசுரம் 10-00 நேயர்விருப்பம்.

**மகாத்மா தியேட்டர்**
தெல்லிப்பழை, சாவகச்சேரி
எம். ஜி. ஆர். ஜெயலலிதா
நடித்த
**கன்னித் தாய்**
(காலை 10 மணி மெட்னி)


## கட்டாக்காலி மாடுகள் தொல்லை

திருநெல்வேலி, திங்கள்

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குட்பட்ட வீதிகளில் திரியும் கட்டாக்காலி மாடுகளின் தொல்லையால் தினமும் பல வீதி விபத்துக்கள் நடைபெறுகின்றன. நேற்றுக்காலை ஆரியகுளம் சந்தியில் மாடொன்றுடன் சைக்கிளில் வந்த இளைஞர் ஒருவர் மோதியதால் அவர் காயங்களுக்குள்ளானார். மணிக்கூட்டுச் சந்தியிலும் மாடு ஒன்றுடன் மோதிய இன்னுமொரு நபர் காயங்களுக்குள்ளானதால் ஆஸ்பத்திரிக்குச் சிகிச்சைபெறச்செல்ல வேண்டியதில் ஏற்பட்டது.

தினமும் அனேக கட்டாக்காலி மாடுகள் பிடிக்கப்பட்டு யாழ்ப்பாண மாநகர சபை மைதானத்தில் கட்டப்பட்டுள்ளன. நேற்று மட்டும் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்துக்கருகாமையில் கட்டாக்காலியாகத் திரிந்த ஐந்து ஆடுகளும், ஏழு மாடுகளும்பிடிக்கப்பட்டு மாநகர சபையினரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன.

மலசலகூட

## தொழிலாளர் வசிப்பிடம் மாறும்

வல்வெட்டித்துறை, திங்கள்

வல்வெட்டித்துறை பட்டின சபையின் மலசலகூட சுத்திகரிப்புத் தொழிலாளர் வசிப்பிடத்தை வேறு இடத்துக்கு மாற்றுவதால் நஷ்ட ஈடாகப்பட்டினசபையினர் 7500 ரூபாவை அரசாங்கத்திடமிருந்து பெற்றிருக்கின்றனர். மேற்படி தொழிலாளர் வசிப்பிடம் இந்திராணி அரசினர் வைத்தியசாலைக்குபெரும்இடைஞ்சலாக இருந்து வந்திருக்கிறது. இவ்வசிப்பிடத்தை வேறொரு இடத்துக்கு மாற்றுவதால் வைத்தியசாலைக்கு 1,50,000ரூபா செலவில் நிர்வாகக் கட்டடம் ஒன்று விரைவில் அமைக்கப்படவிருக்கிறது.

## 'டாக்டர்கள்' இருவர் கைது

டோக்கியோ, நவ. 28

தம்மை டாக்டர்கள் என அழைத்துக் கொள்ளும் இருவர், அதிக இரத்த அமுக்கத்தினாலும், வாதத்தினாலும் கஷ்டப்படும் நோயாளர்களுக்கு, அவர்களின் உடலில் சிறு காயமேற்படுத்தி, இரத்தத்தை உறிஞ்சுவதன் மூலம் சிகிச்சை அளித்த குற்றத்துக்காகக் கைது செய்யப்பட்டனர்.

சாற்றுரோ அபே (82) யும், அவரது மருமகளான திருமதி கிமி அபே (52) யும் மேற்கூறிய முறையில் கடந்த 20 வருடங்களில் 20,000 நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து வந்துள்ளதாக டோக்கியோ பொலிசார் தெரிவித்துள்ளனர்.

பி. டி. ஸி.

### விளம்பரம்

## யாழ்ப்பாணம் மாநகர சபை
### வரவுசெலவுத் திட்டம் 1967

1967-ம் ஆண்டில் யாழ்ப்பாண மாநகர சபைக்கு கிடைக்கக்கூடிய வருமானத்தையும் அதன் உத்தேச செலவுகளையும் உள்ளடக்கிய வரவு செலவுத்திட்டம் யாழ். மாநகரசபைக் காரியாலயத்தில் 1966-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 2-ம் திகதி தொடக்கம் ஏழு நாட்களுக்கு பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படுமென்று மாநகரசபை சட்டத்தின் (அத்தியாயம் 252) தின் 212 (பி) பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

(ஒப்பம்)
டபிள்யூ. ஜே. பெர்னாண்டோ,
(ஒப்பம்)
என். நடேசன்,
(ஒப்பம்)
எஸ். கே. மாணிக்கவாசகர்.
விசேஷ கொமிஷனர்கள்.

மாநகரசபை காரியாலயம்,
யாழ்ப்பாணம்,
நவம்பர் 21, 1966.

2106

## அழைப்பு

மாதகல் சஞ். சூசையப்பர் கல்லூரி அதிபர், திரு. நீ. யேம்ஸ் B. A. அவர்கள் ஒய்வுபெறுவதால் வருகிற 2-12-66 வெள்ளி பிற்பகல் 4 மணிக்கு ஒரு உபசார விழா நடைபெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மாணவர்களும்,
ஆசிரியர்களும்.

2104

## நெசவு ஆசிரியை தேவை

பண்டத்தரிப்புக் கோவிற்பற்று ப. நோ. கூ. ச. சமாச நெசவு நிலையத்திற்குநெசவு ஆசிரியை பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகமைகள்:**

(அ) குடிசைக் கைத்தொழில் இலாகாவினால் அங்கீகரிக்கப்பட்ட கல்லூரியில் பயிற்சி பெற்றுதராதரப்பத்திரம் பெற்றவராயிருத்தல் வேண்டும்.

(ஆ) வயது: 35 வரை அநுபவம் உடையவர்கள் விசேஷமாகக் கவனிக்கப்படுவர்.

சம்பளம்: ரூபா 150-00 (நூற்றுஐம்பது எல்லாமுமடங்கலாக)

விண்ணப்பங்கள் ஷை சமாசத் தலைவர் பண்டத்தரிப்பு என்ற முகவரிக்கு 10-12-66 க்குப் பிந்தாமல் பதிவுத் தபால்களில் அனுப்புதல் வேண்டும்.

தலைவர்,
பண்டத்தரிப்பு கோ. ப.
ப. நோ. கூ. ச. சமாசம்,
பண்டத்தரிப்பு
25-11-66. 1040

## ஆசிரியர் பற்றாக்குறை

முருங்கன், திங்கள்

பதின்மூன்று ஆசிரியர்கள் இருந்து கடமையாற்றிய முருங்கன் றோமன் கத்தோலிக்க பாடசாலையில்தற்பொழுது 8 ஆசிரியர்கள் தான் கடமையாற்றி வருகின்றனர். இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களின் காலி இடங்களுக்குவேறு ஆசிரியர்கள் இன்னமும் அனுப்பப்படவில்லையாம் ஆசிரியர்கள் பற்றாக்குறையால் மாணவர்கள் கல்வி பாதிக்கப் படுகின்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜோர்டான் பாதுகாப்புக்கு சவூதிஅரேபியா துருப்புக்கள்

அம்மான், நவ. 28

ஜோர்டான் எல்லையில் 8 இடங்களில் சவூதி அரேபிய துருப்புக்கள் நிலைகொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல், சென்ற 13-ம் திகதி ஜோர்டான் கிராமங்களின் மீது நடத்திய தாக்குதலைத் தொடர்ந்தே சவூதி அரேபியத் துருப்புக்கள் ஜோர்டானின் பாதுகாப்புக்கு வந்துள்ளன. இதற்காக ஜோர்டான் மன்னர் ஹுசெய்ன் சவூதி அரேபிய மன்னர் பெய்சாலுக்குத் தமது நன்றியைத் தெரிவித்துள்ளார்.

ஜெருசலத்தில்

ஜோர்டானிலுள்ள ஜெருசலம் பகுதியில் மன்னர் ஹுசெய்னுக்கு எதிராக நடைபெற்ற கிளர்ச்சிகளைத் தொடர்ந்து பிறப்பிக்கப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் இப்போது தளர்த்தப்பட்டுள்ளதாகவும் ஜோர்டானில் பொதுவர இப்போது அமைதி நிலவுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'உணவுக்காக அமெரிக்கா செல்லவேண்டியிருக்காது'

### அமைச்சர் சுப்பிரமணியம் உறுதி

சென்னை, நவ. 28

முந்திய வருடங்களைப் போல் உணவுப் பிரச்னையை இம் முறையும் சமாளித்துவிடலாம் என்றும் பாரதத்தின் உணவுத் தேவைக்காக தாம் இம்முறை அமெரிக்கா செல்ல வேண்டி நேரிடமாட்டாது எனத் தாம் நம்புவதாகவும் மத்திய உணவு அமைச்சர் திரு. சுப்பிரமணியம் இங்கு தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு வரும் உணவு அடுத்த வருடத்தில் குறைக்கப்படக் கூடிய சூழ்நிலை உணரப்படுவதாகவும் இந்த நிலையைக் கருத்தில் கொண்டு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டுமென்றும் இவ்விதம் ஒத்துழைத்தால் நிலைமையை சமாளித்துவிடலாமெனவும் அவர் குறிப்பிட்டார்.

தேசிய உணவு பட்ஜட் ஒன்று தயாரிக்கப்படவிருப்பதை எடுத்துக்கூறி தென்னிட்டிலுள்ள ராஜ்யங்கள் இந்த பட்ஜட் தயாரிப்பதற்கு தேச நலனைக் கருத்தில் கொண்டு ஒத்துழைப்புத்தர முன்வர வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

## 'ஜாதியில் நம்பிக்கையில்லை என்பதைசெயலில்காட்டவேண்டும்'

### டாக்டர் ராதாகிருஷ்ணன்

புதுடில்லி, நவ. 28

'மக்கள் பொறுமையின்மையையும் ஆகந்தையையும் கைவிட்டால்தான் சிறந்த வாழ்வு வாழ முடியும். தாம் நினைப்பதுதான் சரியென்றும் மற்றவர் நினைப்பதெல்லாம் தவறு என்றும் கொள்ளும் கூறுகிய முடிவுக்குப் பலர் இன்று வந்துவிடுகிறார்கள். இது பல சச்சரவுகளுக்கும் வழி வகுத்துவிடுகிறது.'

இவ்வாறு குருநானக்கின் பிறந்ததின கொண்டாட்டத்தில் கலந்து உரையாற்றிய பாரத ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், ஜாதியில் நம்பிக்கையில்லை என்று ஒவ்வொருவரும் பேசினால் மட்டும் போதாது; அதனை செயலில் காட்ட வேண்டும் என்றார். உண்மையான சமயப்பற்றுள்ளவர்கள் செயல்மூலம் தான் தமது கொள்கைகளைக் காட்டுகிறார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

குருநானக்கின் சிறந்த பக்தியை டாக்டர் ராதாகிருஷ்ணன் விரிவாக எடுத்துக் கூறினார்.

## "ஐ. நா. தீர்மானம் பாரபட்சமானது"

ஜெருசலம், நவ. 27

இஸ்ரேலுக்கெதிராக ஐ. நா. பாதுகாப்புச் சபை இயற்றியுள்ள தீர்மானம் பாரபட்சமானது என இஸ்ரேல் பிரதமர் திரு. எஷ்கோல் ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

ஜோர்டான் கிராமங்கள் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலைக் கண்டித்த ஐ. நா. பந்தோபஸ்துசபை சமீபத்தில் தீர்மானம் நிறைவேற்றியிருந்தது. மீண்டும் இஸ்ரேல் தாக்குதலை நடத்தினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தது.

## ஹங்கேரியில் பிரெஷ்னேவ்

புடாபெஸ்ட், நவ 28

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் திரு. லியோனிட் பிரஷ்னேவ், ஹங்கேரியில் சுற்றுப்பிரயாணம் செய்து வருகிறார். அவரது விஜயத்தின் போது, அவர் கம்யூனிஸ்ட் ஐக்கியம் பற்றிய உலகமாநாடு ஒன்றைக் கூட்டுவதற்கு வலியுறுத்துவார் என அறியப்படுகிறது. (பி.டி.ஸி.)

## 'மதத்தை அரசியலுடன் கலக்கக்கூடாது' —சவான்

புதுடில்லி, நவ 27

'மக்கள்மனதில் வகுப்புவாதத்தை வளர்த்துக்கொண்டிருந்தால் அதனால் எதுவித இலாபத்தையும் பெற்றுவிடமுடியாது. மதம் ஒருவருடைய சொந்தக் கொள்கையைப் பொறுத்தது. இதனை அரசியலுடன் கலந்துவிடக்கூடாது. ஒற்றுமைப்பிணைப்பை ஏற்படுத்த முயற்சிப்பதே முன்னேற்றத்துக்கு உதவுவதாக இருக்கும்.'

இவ்வாறு பாரத உள்துறைமந்திரி திரு. சாவான் தேசிய ஒருமைப்பாட்டு மகாநாடொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

## திருப்தியற்ற பேச்சு வார்த்தை

### பெளடன் அறிவிப்பு

லண்டன், நவ. 28

ரொடீஷியப்பிரச்னை பற்றி சாலிஸ்பரியில் கவர்னர் கிப்சுடனும் சட்ட விரோத ஆட்சி செலுத்தும் திரு. அயன்ஸ்மித்துடனும் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு திரும்பியுள்ள பிரிட்டிஷ் காமன்வெல்த் மந்திரி திரு. பெளடன் தாம் நடத்திய பேச்சுவார்த்தையில் அதிக திருப்தி கொள்ளவில்லையெனத் தெரிவித்துள்ளார்.

திரு பெளடனை இன்னும் சிலநாட்கள் தங்கிச்செல்லுமாறு திரு. அயன்ஸ்மித் கேட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## நால்வரை துரத்தி சுட்டான்

மெல்போன், நவ. 28

சாப்பாட்டுக்கடையொன்றில் ஏற்பட்ட சண்டையொன்றின் பின், ஜனநெருக்கடி நிறைந்த தெருக்களினூடாக ஓர் இளைஞன், வேறு நான்கு இளைஞர்களைத் துரத்திச்சென்று சுட்டான். நெஞ்சு, கை, கால் ஆகியவற்றில் காயப்பட்ட நான்கு இளைஞர்களும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். (பி.டி.ஸி.)

## ஓவியர்மீது கொலைக்குற்றம்

பேர்த் (அவுஸ்திரேலியா), நவ. 28

கோல்ஃப் விளையாடிக்கொண்டிருந்த 54 வயதுப் பெண்மணியை, அவர் விளையாடிக்கொண்டிருந்த இடத்தில் வைத்துக் கழுத்தைத் திருகிக் கொலைசெய்ததற்காக 47 வயது ஓவியர் ஒருவர் இங்கு கைதுசெய்யப்பட்டுள்ளார். (பி.டி.ஸி.)

## 112 வயது

நியுயோர்க், நவ. 28

நியுயோர்க்கின் ஆகக்கூடிய வயதுள்ளவரான திரு. மாகோஸ்பிரையர், நேற்று முன்தினம் தமது 112 வது பிறந்தநாளைக் கொண்டாடினார். (பி.டி.ஸி.)

## ரோமியோ - ஜூலியற் பற்றி தகராறு

### ருசிகரமான கருத்துப் போர்

வெரோனா, (இத்தாலி) நவ. 28

இத்தாலியிலுள்ள வெரோனாநகர், ஆங்கிலக் கவிஞர் ஷேக்ஸ்பியர் எழுதிய 'ரோமியோவும் ஜூலியற்றும்' நாடகத்தின்மையமான இடமாகும். அந்நகரிலுள்ள உல்லாசப் பிரயாணிகள் காரியாலயத்துக்கும் நகர் மக்கள் ஒரு சாராருக்குமிடையே இப்போது ஒரு தகராறு தோன்றியுள்ளது. ஜூலியற்றுக்குச் சிலை எடுக்க விரும்புகிறது உல்லாசப் பிரயாணிகள் காரியாலயம். வெரோனா நகர் மக்கள் சிலர் ஏற்கனவே ஜூலியற் இல்லமொன்றும், ஜூலியற் சமாதி யொன்றும் இருப்பதால் இனி ரோமியோவுக்கே ஒரு சிலை எழுப்ப வேண்டுமென்று வற்புறுத்தி வருகின்றனர்.

இதற்கிடையில் ரோமியோவும், ஜூலியற்றும் பற்றி மற்றுமோர் விவாதம் அண்மையிலுள்ள மிலான் நகரில் தொடங்கியுள்ளது. இவர்கள் இருவரையும்பற்றி விமர்சனக் கடிதங்களை அங்குள்ள பத்திரிகை ஒன்று வெளியிட்டு வருகிறது.

'இரண்டாவது காதலனை வரவேற்றமையால், ஜூலியற் அவ்வளவு குணமான பெண் அல்ல' என ஒரு பெண் கடிதம் எழுதியுள்ளார். மற்றுமோர் கடிதத்தில் 'கன்னி ஒருத்தியைக் கெடுக்க முயற்சித்ததற்காக ரோமியோ சிறையிலிடப்பட வேண்டியவர்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (பி.டி.ஸி.)

## சிறுவர் விளையாட்டு ஒருவர் மரணம்

நியூயோர்க், நவ. 28

வர்ணப்பூச்சு சாலையிலிருந்த 15 வயதுச்சிறுவர்கள் இரு காகிதப் பையினுள் ஒரு பூனையை அடைத்தனர். பின்னர் தமது வீட்டுக் கராஜில் சென்று, கதவை அடைத்து விட்டு பூச்சை மணப்பதில் போட்டி யொன்றை நிகழ்த்தினர். பூட்டிய கராஜினுள் இருந்துகொண்டு மூச்சை மூசித்ததன் விளைவாக ஒரு சிறுவன் இறந்து விட்டான். மற்றவன் அறிவற்ற நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளான். (பி டி.ஸி)

திரு. பெளடன் திரு. ஸ்மித்திடமிருந்து பிரிட்டிஷ் பிரதமருக்கு ஒரு கடிதம்கொண்டு வந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. கடிதத்தின்வாசகம் தெரிவிக்கப்படவில்லை.



## 'சிறந்த தலைவர் மாசேதுங்'

### சீனப்பத்திரிகை பாராட்டு

பீகிங், நவ. 28


'மாசேதுங் இந்த சகாப்தத்தின் தலைசிறந்த தலைவர்' என சீனப்பத்திரிகையான 'பீப்பிள்ஸ் டெய்லி' பாராட்டியுள்ளது.

சீன கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் மாசேதுங்கின் பெரிய அளவிலான படத்தை 'பீப்பிள்ஸ் டெய்லி' முன்பக்கத்தில் வெளியிட்டிருந்தது.

## கோவில்கட்டடத்திற்கு அன்பளிப்பு

வசாவிளான், திங்கள்

வசாவிளான் ஞான வைரவர் கோவில் கட்டட நிதிக்காக வசாவிளான் ம. மு. ச. கட்டடத்தில் 'மாசநிலா' படக்காட்சி காண்பிக்கப்பட்டது. திரு. குரு. சீனி திருச்செல்வம் என்பவர் படக்காட்சியைத் திறந்து வைத்து கோவில் நிதிக்காக 100 ரூபா கொண்ட பணமுடிப்பு ஒன்றை வழங்கினார்.



அடுத்த வருடத்தில் பூமியைச் சுற்றி வானவெளியில் வலம் வரவிருக்கும் அமெரிக்க வானவெளி வீரர்கள்தான் இவர்கள். வலது கோடியில் நிற்பவர் வேர்ஜில் கிரிசம், மத்தியில் நிற்பவர் ரொஜர் ஷாபீ, மற்றவர் எட்வேர்ட் வைட். முதல் தடவையாக ஒரு வானவெளிக் கப்பலில் ஒரே நேரத்தில் மூவர் பயணத்தை மேற்கொள்ளும் பரிசோதனையில் இறங்கியுள்ள இவர்கள் 14 நாட்களுக்கு வானவெளியில் ஒன்றாக வலம்வருவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

என்னுடைய குறிக்கோள் சமயனிநியோகம் தான். ஆனால் நான் கற்பனை செய்துபார்க்க முடிந்தவரை அதை நிறைவேற்ற முடியாது. ஆகையால் நான் 'சமத்துவ' விநியோகத்திற்காகப் பாடுபடுகிறேன். —மகாத்மா காந்தி

ஈழநாடு

EELANADU National Tamil Daily, Post Box 49 JAFFNA
Telegrams: EELANADU Jaffna: Telephone 7

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு கார்த்திகை 14 (29-11-66

## பொருளாதாரக் கருத்தரங்கு

இலங்கையின் பொருளாதாரம் பற்றியும் இன்றைய பிரச்சினைகள் பற்றியும் திட்ட, பொருளாதார விவகார அமைச்சில் விவாத அரங்கு ஒன்று ஆரம்பமாகியிருக்கிறது. அடுத்த மாதம் 16-ம் திகதிவரை நடைபெறவிருக்கும் இக்கருத்தரங்கில் இலங்கை மற்றும் வெளிநாட்டுப் பொருளாதார நிபுணர்களும் கலந்துகொள்கின்றனர். பொருளாதார ஒத்துழைப்பு அபிவிருத்தி ஸ்தாபனத்தினால் இந்தக் கருத்தரங்கு ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. இந்த ஸ்தாபனத்திலிருந்து பொருளாதார விற்பன்னர்களும் கலந்துகொள்ளும் இக்கருத்தரங்கினால் இலங்கை பயனடைய வேண்டும்.

தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின்னும் சரி அதற்கு முன்னர் ஆட்சிபீடத்திலிருந்தவர்களும் சரி நாட்டின் பொருளாதார விருத்தி பற்றியும் வாழ்க்கைச் செலவு உயர்வைக்குறைப்பது பற்றியும் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைப்பது பற்றியும் கருத்தரங்குகளை நடத்தியதுடன் நிபுணர்களைக் கொண்ட குழுக்களையும் பாரிலிமெண்டரி உபகுழு மந்திரிசபை உபகுழு போன்றவைகளையும் அமைத்ததோடு நின்றுவிட்டனர். கமிஷன்களும், குழுக்களும், உபகுழுக்களும் பல கட்டங்களையும், மகாநாடுகளையும், விவாதங்களையும் நடத்தி அறிக்கைகளைச் சமர்ப்பித்தன. அறிக்கைகள்தான் அதிகரித்தனவே யொழிய பொருளாதாரம் விருத்தியடையவில்லை. அறிக்கைகளைத்தான் அரசாங்கங்கள் எதிர்பார்த்தன. திட்டமிட்டுச் செயலாற்ற அவை விரும்பவில்லை. அதற்குப் பதிலாக குறுகிய தேசியத்திலும் அற்ப விஷயங்களிலும் காலத்தைக் கடத்தின. இதன் விளைவு இன்று நாட்டின் பொருளாதார நிலை மோசமடைந்துள்ளது. இனி என்ன நிலையை அடையுமோவென்ற அச்சம் தலைதூக்கியுள்ளது.

நமது நாட்டின் நிலையையும் நமது நாட்டில் உள்ள மூல வளங்களை நமது தேவைகளுக்கும் பொருளாதார விருத்திக்கும் எவ்வாறு பயன்படுத்தலாமென்பதையும் இப்பொழுது நடைபெறும் கருத்தரங்கம் தெளிவுபடுத்தக்கூடியதாக இருக்கவேண்டும். பிறநாட்டநிஞர்கள் தங்கள் நாடுகள் எவ்விதம் பொருளாதாரத்தில் விருத்தியடைந்தன என்பதைப் பற்றித் தெரிவிக்கும் போது அந்நாடுகளை அப்படியே பின்பற்ற வேண்டுமெனக் கருதாது நமது நிலைக்கேற்பத் திட்டமிட்டுச் செயலாற்ற நாம்முன் வரவேண்டும்.

பொருளாதாரத் திட்டங்கள் அரசியலுடன் கலக்கக்கூடாது. நாட்டின் நலனையே கருத்திற்கொண்டு தெற்கு, வடக்கு என்ற வேற்றுமைகளுக்கும், தமிழர், சிங்களவர் என்ற பாகுபாடுகளுக்கும் இடமில்லாமல் பொருளாதார விருத்தியைக் கவனத்திற் கொண்டு, துரித கதியில் செயலாற்ற இந்தக் கருத்தரங்கு உதவி செய்வதாக இருக்கவேண்டும்.

## துறைமுக விருத்தி

காங்கேசன் துறைத் துறைமுகத்தை அபிவிருத்திசெய்வதற்கான வேலைகள் அரசாங்க என்ஜினியரிங் கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும் வடபகுதியின் இதர துறைமுகங்களை அபிவிருத்திசெய்து அவைகளைத் திறப்பது பற்றி ஆராயப்பட்டு வருவதாகவும் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் சமீபத்தில் தெரிவித்திருந்தார். இது வடபகுதி மக்களுக்கு மட்டுமல்ல நாட்டின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்ட அனைவருக்குமே மகிழ்ச்சியளிப்பதாகும்.

வடபகுதித்துறைமுகங்களின் பழையகால வரலாறு பற்றி இப்பொழுது எடுத்துக்கூறவேண்டிய அவசியமில்லை ஆனால் சென்ற சில வருடங்களாக வடபகுதிக்குத் திருப்பிவிடப்பட்ட உணவுக் கப்பல்களில் நடைபெற்றஇறக்குமதி வேலைகளின் துரிதம் அரசாங்க அதிகாரிகளின் பாராட்டுதல்களை மட்டுமன்றி கொழும்புத் துறைமுகத் தொழிலாளரின் பாராட்டுதல்களையும் பெற்றிருக்கிறது. கொழும்புத்துறைமுகத்தில் அடிக்கடி நடைபெறும் வேலைநிறுத்தங்களினால் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள நஷ்டம் கொஞ்சமன்று துறைமுக வசதிகள் பல இங்கு இருக்கையில் ஒன்றிரண்டு துறைமுகங்களை மட்டும் ஏன் நம்பியிருக்கவேண்டும்.

துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதனால் வேலையில்லாத் திண்டாட்டமும் பெருமளவு குறையவழி பிறக்கும். இந்திய அரசாங்கத்தின் சேது சமுத்திரத்திட்டம் நிறைவேற்றப்பட்டதும் கொழும்புத் துறைமுகத்தை எல்லாக்கப்பல்களும் நாடவேண்டிய அவசியமேற்படமாட்டா. ஆனால் வடபகுதித்துறைமுகங்கள் குறிப்பாக காங்கேசன்துறைத் துறைமுகம் விருத்திசெய்யப்பட்டால் கொழும்பை நாடாத கப்பல்கள் காங்கேசன்துறைக்கு வரநேரிடும். சில அரிசிக் கப்பல்களை வருடத்தில் சிலதடவைகளுக்கு அனுப்புவதற்காக மட்டும் வடபகுதித் துறைமுகங்களை விருத்தி செய்யாமல் பிறநாட்டுக் கப்பல்களை இங்கே கவர்ந்திழுக்கக்கூடிய முறையில் அபிவிருத்தி செய்வது பலன்தர வல்லது.

# பேராதனையில் முருகன் ஆராதனை

[நேற்றைய தொடர்ச்சி]

எப்படியெல்லாம் ஆருயிர்களை எல்லாம் வளர்த்து மக்களுக்குப் போகத்தைத் தருமோ அதுபோலத் தான் முருகப்பெருமானுடைய பேரருள் அருள் ஆறு காலாக எங்கும் படர்ந்து மக்களுடைய உள்ளத்தில் புகுந்து அவனுடைய வெப்பத்தை மாய்த்து உயிர்க்கூட்டங்களை எல்லாம் தணிக்கச்செய்கின்ற . சிவபோகம் தந்து இந்தச் சிவபோகத்தை அருளுபவன் சிவகுமாரனாகிய சிவ குருநாதனாகிய ஆண்டவன். அவன் எல்லாரிலும் உயர்ந்தவன் என்பதை நாம் மட்டுமா தெரிந்துகொள்கிறோம் சிவபெருமானே தெரிந்து கொண்டார். குமரகுருபரனாய் இருக்கும்பொழுது பிரணவத்தின் பொருளை, நீ இருக்கிற இடத்தில் இருத்தி வைத்தால் சொல்லுவேன் என்று சொன்னார். அப்பொழுது சிவபெருமான் என்ன செய்தார்? மிகமிகச் சிறந்த இடத்திலே வைத்தக் குருநாதனைப் பூசிக்கவேண்டும். மிகச் சிறந்த இடம் எது? ஆடவருக்கு மிகச் சிறந்த இடம் தோள். அதுதான் மிக உயர்ந்தது. திண்தோளினாலே பெருமை பெறுபவர்கள் ஆடவர்கள். ஆகவே தன்னுடைய வீரப் புயத்திலே தாங்கித் தோளின்மேலே

கி. வா. ஜகந்நாதன்

வைத்துக்கொண்டார் முருகப்பெருமானை இதில் இரண்டு தந்திரங்கள் தெரிகின்றன. ஒன்று, மிக உணர்ந்த இடத்தில் உபதேச கர்த்தாவாகிய முருகனை வைக்கவேண்டும் என்பது. மற்றொன்று, உபதேசம் செய்யும்போது துயிலவிடாது காதும் வாயும் கலந்தாற்போல அமையவேண்டும். தோளிலே இருக்கும் குழந்தை காதிற்கருகில் வாயை வைத்துச் சொல்லலாம் தானே! அதுமாத்திரமல்ல, குருநாதரை வைப்பதோடுகூடக் குழந்தையையும்கூடத் தோளில் வைத்துக்கொள்வது வழக்கம் தானே. ஆகவே இத்தனை அமைப்பும் ஒருங்கே நிறைவேறும்படி குருநாதரை உயர்ந்த இடத்தில் அமர்த்திவைப்பது, குழந்தையைத் தோளில் தூக்கிக் கொள்வது பரமரகசியமான ஒன்றைக் காதில்மாத்திரம் ஓதும்படி செய்வது ஆகிய இத்தனை காரியங்களும் ஒருங்கே நிகழும்படியாக ஆண்டவன் குமரகுருபரன் செய்தான். அவனை மிக உயர்ந்த இடமாகிய தோளில் ஏற்றிக்கொண்டான். தோளைப் புயமலை என்று சொல்வார்கள். ஆண்டவன் கைலைநாதன் கைலாசத்தின் மீது இருக்கிறான். கைலாசநாதனாகிய அவன், தன் திருத்தோள் மலையின் மீது வைத்து உலகமெல்லாம் மலையின்மேல் வைத்துக் கும்பிடும் தண்டபாணியைப் போலே முருகனை வைத்து வழிபட்டான். இதுவும்கூட முருகன் மிக உயர்ந்த இடத்தில் இருக்கத்தக்கவன் என்பதைக் காட்டுகிறது. இன்னும் யோக முறையில் சென்றால் ஆறு ஆதாரத்திலும் வாசியை ஆட்டி நலம் செய்வதற்காக அருள் பாலிப்பவன். ஆறு ஆதாரங்களிலே ஒவ்வொரு ஆதாரமாக மூலாக்கினி கடக்க வேண்டும். இடையிலே குண்டலினி என்ற நாகபாம்பு [illegible] [illegible] இருக்கின்றது. அந்த அக்

கினி செல்லச் செல்ல, அது நீண்டு முன்னே ஆடும். குண்டலினியின் சக்தியானது வழிகாட்டப் பின்னாலே தொடர்ந்து செல்ல வேண்டும். இதற்கு ஆண்டவன் முருகன் அருள்செய்கிறான். அவன் மயில்மேலே ஏறிவந்தால் சுருட்டியிருக்கின்ற பாம்பான குண்டலினி எழுந்தோடும். மயிலுக்கு முன்னாலே நாகம் வருவது இயல்புதானே. இந்தத் தத்துவத்தை அருள் பிரகாசவள்ளலார் "வாசி நடத்தி வருவாண்டி, ஒரு வாசி நடத்தித் தருவாண்டி" என்று சொல்கிறா . வாசி யோகம் என்று சொல்லுவது. வாசி என்பது குதிரை என்பது ஒரு பொருள். யோகம் என்பது ஒரு பொருள். மயிலின் மேலே ஏறிவருவான். அப்படி வருகின்ற முறையினாலே வாசியைத்தைக் கைகூடச்செய்வான் என்பதை மகாயோகியான இராமலிங்கசுவாமிகள் சொல்கின்றார், மயிலைக் கண்டால் நாகம் ஓடுமென்பது நமக்குத் தெரியும். மயில் வெறும் மயிலல்ல குண்டலினி சக்தியை எழுப்பி ஞானக்கினியை மேலே போதரவிட்டு அதனாலே இன்பமுறச்செய்கின்றது. ஆறு ஆதாரங்களிலும் மீதாக இருக்கின்ற பிரம மந்திரம். அது சகசானந்தம் என்பது ஒரு மலை. மலையின் முகடு. அந்த முகட்டிலே சாக்ஷாத் ராஜராஜேஸ்வரி திரிபுரசுந்தரி எழுந்தருளி இருக்கிறாள் என்று நூல்கள் கூறும். அங்கே தான் முருகன், அந்தப் பெருமாட்டியின் திருமடியில் உலவுகின்றான் அந்தப் பெருமானைக் கண்டால் ஆனந்தம் குதிகொள்ளும். இந்தத் தத்துவங்களை எல்லாம் யோக நூல்களில்

பார்க்கலாம். அவன் யோகிகளுக்கெல்லாம் தயாபரனாய் இருக்கின்றான். அருணகிரிநாதர், "யோகாதயாபரனே" என்று சொல்கிறார். இத்தனை வகைகளினாலே முருகப்பெருமான் மிகமிக உயர்ந்த இடத்திலே இருக்கத் தகுந்தவன். உயர்ந்த இடம் எதுவாக இருந்தாலும் அந்த இடத்தில் குமரனும் கோலோச்சுபவன் மனிதனுடைய தோளிலே வீற்றிருப்பவன். மனிதனுடைய தலையிலே வீற்றிருப்பவன். மலையினுடைய முகட்டிலே வீற்றிருப்பவன். கோபுரத்தின் உச்சியிலே இருப்பவன். உயர்ந்த மரத்தின் மேலே மலராக எழுந்தருளியிருப்பவன். சிவபெருமானது உச்சியிலே இருப்பவன். யோக பூமியின் மேல் மட்டத்தில் இருப்பவன். ஆதாரங்களின்மேலே இருப்பவன். நீடாத் சடாசரத்தின் மீதே பராபரத்தை நீ காண், என அனைச்சொல் அருள்வாயே என்று திருப்புகழ் சொல்லுகின்ற முறையிலிருந்து அவன் ஆதாரம் கடந்த நிராதார நிலையாகிய மலையின் மேலே கோனாக, குமாரனாக, சாந்த மூர்த்தியாக எழுந்தருளிருப்பதென்பது நன்று கப் புலகின்றது. இவ்வளவும் சொன்னபடியினாலே உலகத்தில் தமிழர்கள் தம்முடைய இலக்கியத்தில் மலையின்மேல் ஏற்றிய விளக்காகக்கொண்ட ஞானச்சுடராகிய எம்பெருமான் எல்லா இடங்களிலும் உயர்ந்து நிற்கிறானென்பது வேதநூல். கலைப்பீடமாகிய இந்த இடத்தில் மலைமுகட்டிலே இறைவன் முருகனுக்கு ஒரு கோயில் கட்டப்போகிறார்கள். இது மிகப் பொருத்தமாகும். அவன் மலைக்கொல்

(5-ம் பக்கம் பார்க்க)

## சிங்கள பிக்குவுக்கு தமிழ் பட்டம்

பல வருடங்களுக்கு முன்பு மஞ்சள் உடை போர்த்த ஒரு சிங்கள பௌத்த பிக்கு இலங்கை வானொலியின் தமிழ் பிரிவுக்குள் நுழைந்து 'நான் தமிழில் ஒரு பேச்சு ஒலிபரப்பப் போகிறேன்' என்று அறிவித்ததும், அங்குள்ளவர்கள் மூக்கில் விரலை வைத்தார்கள் மறு பேச்சின்றி அந்தப் பிக்கு தாம் எழுதிக் கொண்டுவந்த பேச்சு பிரதியை நீட்டினார். அதன் தலைப்பு 'திருக்குறளும் திருவள்ளுவரும்'. அழகான, எளிய தமிழில் இலக்கணப் பிழைகள் இன்றி ஆராய்ச்சிக் கண்ணோடு எழுதப்பட்டிருந்தது அக்கட்டுரை.

அடுத்த வாரம் வணக்க பண்டித தர்மரத்தின தேரோ தமது பேச்சை ரேடியோவில் ஒலிபரப்பினார்.

யும் சீவக சிந்தாமணியையும் சிங்களத்தில் மொழிபெயர்த்து அவற்றின் நயங்களை சிங்கள மக்களுக்கு எடுத்துக்காட்டியவர் தேரோ அவர்கள். அத்துடன் தென்னிந்திய பௌத்த சரித்திரம் ஒன்றை தமிழிலும் மொழிபெயர்த்திருக்கிறார்.

தர்மரத்தின தேரோ போன்றவர்களுக்குசிங்களம் தமிழ் என்ற குறுகிய வேறுபாடுகள் எவ்வளவு தனலேனும் இருக்குமோ என்பது சந்தேகம் இலக்கியம், கலை ஆகியவற்றில் சுவை கண்டு அவற்றில் ஆழ்ந்திடப்பவர்களுக்கு சாதி, சமயம், இனம் என்ற வித்தியாசம் எங்கே தோன்றப்போகிறது.

வேறொரு துறையில் புகழீட்டியுள்ள இன்னுமொரு லங்கா புத்திரனை பாரதம் போற்றி பாராட்டி பரிசில் வழங்கியுள்ளது. லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் என்ற சிங்களவர் சினிமாப் படம் பிடிப்பதில் உலகப் புகழ் பெற்றவர். கேவலம் பணம் ஒன்றையே இலட்சியமாக வைக்காமல் உயர்ந்தகருத்துக்களையும், மேலான கலைப் பண்புகளையும் கொண்ட சிங்களப்படங்களை தயாரிப்பதில் லெஸ்டர் பீரிஸ் இந்தியாவில் பிரசித்தி பெற்ற சத்தியஜித்ரேய் என்பவருக்குஇணையானவர். சமீபத்தில் பீரிஸ் அவர்களை இந்தியதிரைப்பட சங்கங்கள் அழைத்து கௌரவித்தன. சென்னையிலும் பம்பாயிலும் அவருடைய படங்கள் காண்பிக்கப்பட்டன.

(5-ம் பக்கம் பார்க்க)

## நாட்டிலும் நகரிலும்

அதற்குப் பின் அவர் பல தமிழ் நூல்களை வாசித்து தமிழ் இலக்கியத்துக்கு சிறந்த தொண்டாற்றியுள்ளார்.

அகிலஇந்திய தமிழ் எழுத்தாளர் சங்கம் வருகிற டிசம்பர் 3-ம், 4-ம் திகதிகளில் தர்மரத்தின தேரோவுக்குப் பட்டம் அளித்துக் கௌரவிப்பதையிட்டு இலங்கையிலுள்ள சிங்களவரும் தமிழரும் மகிழ்ச்சிப் பெருமிதம் அடைவார்கள் என்பது நிச்சயம்.

புத்தசமயத்துடன் நெருங்கிய சம்பந்தமுள்ள தமிழ் காவியமாகிய மணிமேகலையையும் சிலப்பதிகாரத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நால்வராக சென்ற மீனவர் மூவராக திரும்பினர்

## நடுக்கடலில் பிரேத அடக்கம்; மீன் சாப்பிட்டதும் வாந்தி

### முல்லைத்தீவு மீனவரின் சோகக்கதை

முல்லைத்தீவு, திங்கள்

முல்லைத்தீவுக் கடற்கரையிலிருந்து ஆழ்கடலில் மீன் பிடிக்கச்சென்ற நால்வர் பதினெட்டுத் தினங்கள் கடலில் தத்தளித்து, 'இந்தியக் கடற்படைக் கப்பலின் உதவியோடு கல்கத்தா சேர்ந்து பல வாரங்களின் பின் மூவராக நாடு திரும்பியிருக்கின்றனர். நால்வரில் ஒருவர் நடுக்கடலில் பட்டினியால் மாண்டுபோனார். பதின்மூன்று தினங்கள் அவர்கள் கடலில் அனுபவித்த கஷ்டங்களை அவர்களே அதை இங்கு கூறுகிறார்கள்.

முல்லைத்தீவிலிருந்து ஆழ்கடலில் மீன்பிடிக்கச்சென்ற நால்வரில் ஒருவர் இறந்து விட்டதாகவும் மூவர் இந்தியக் கப்பலான டெல்லியினால் காப்பாற்றப்பட்டு கல்கத்தா விடுதிவீட்டில் இருந்ததாகவும் 'ஈழநாடு' முன்னர் செய்தி வெளியிட்டிருந்தது வாசகர்கள் அறிந்ததே. நேற்றுக் காலை கல்கத்தாவிலிருந்து விமானத்தில் இ. அன்ரனி அல்பிரட், க. ஸ்ரீஸ்கந்தராசா, இ. முத்துராசா ஆகிய மூன்று மீனவரும் இரத்மலானை விமான நிலையத்தில் வந்திறங்கினர். இவர்களை முல்லைத்தீவு பட்டணசபை அங்கத்தவர் திரு. எம். எஸ் வல்லிபாம்பிள்ளையும், சமாதான நீதவான் திரு. ஏ. வி. அருணப்புவும் வரவேற்றுத் தங்கள் காரில் முல்லைத்தீவுக்குக்கொண்டு வந்தனர். வரும் வழியில் வவுனியாவில் தங்கியிருந்த வவுனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரத்தை அவர்கள் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

இம்மூவரும் 'ஈழநாடு' நிருபரிடம் தமது அனுபவத்தைக் கூறினர்.

#### பசியும் தாகமும் பயமும் வதைத்தன

நாங்கள் 555-ம் இலக்கம் கொண்ட 'இலங்கைநாயகி' என்னும் இயந்திரப் படகில் ஆழ்கடலில் மீன்பிடிக்கச் சென்றோம். நாங்கள் நால்வராகச் சென்றோம். திரும்பும்போது மூவராகத் திரும்பியுள்ளோம். இச்சமயம் கடலில் காலஞ்சென்ற சி. இசிதோரின் மகள் இ. முத்துராஜாவின் கண்களிலிருந்து கண்ணீர் மல்கியது.

நாங்கள் சென்ற சில மணி நேரத்தில் எஞ்சின் இயங்க மறுத்துவிட்டது. நாங்கள் நால்வரும் எங்களால் இயன்றவரை பாடுபட்டோம். பயனில்லை. கடலில் சிறிது மோசமானதாகவிருந்தாலும், காற்று வீசிக்கொண்டிருந்தாலும் எங்கள் படகுமேல்நோக்கிச் சென்று கொண்டிருந்தது. நாம் இறைவனை வேண்டியவண்ணம் 'நடப்பது நடக்கட்டும்' எனக் கூறிக்கொண்டு பிரார்த்தனையிலிருந்தோம். பசி ஒருபுறம், தண்ணீர் தாகம் இன்னொருபுறம். எங்கள் கதி என்ன என்ற திகில் ஒன்றாகச் சேர்ந்து எம்மை வாட்டியது.

#### மூன்றும் நாள் ஒருவர் மயங்கினர்

இரண்டு நாட்கள் கழிந்து மூன்றும் நாள் ஸ்ரீஸ்கந்தராசா என்பவர் மயங்கி அறிவில்லாத நிலையில் இருந்தார். அவரின் நிலையைக் கண்டபின் எங்களுக்கு அச்சம் அதிகரிக்கத் தொடங்கியது. அப்போது எமக்குள் வயதில் முதிர்ந்தவரான காலம் சென்ற இசிதோர், "ஸ்ரீ இறந்து விட்டான்" எனக் கூறினார். அப்போது அன்ரனி அல்பிரட் 'இல்லை' எனக் கூறி தண்ணீரை அள்ளி அள்ளி அவரின் உடம்பில் ஊற்றினார். சில மணி நேரத்தில் அறிவு வந்து அவர் பேசினார். நாட்கள் ஐந்தாகிவிட்டது. பசி வாட்டத் தொடங்கியது. மீனைப் பிடித்து, எங்களிடம் இருந்த தீப் பெட்டியின் உதவியினால் ... ரோம். வாந்தி தொடங்கியது. ஏதோ இறைவன் திருவருளால் சில மணி நேரத்தில் குணம் ஏற்பட்டு விட்டது.

#### மீன்தான் உணவு ஆனால் வாந்தி

இந்த ஐந்து நாட்களும் எங்களை வேறுபடகு எதுவும் சந்திக்கவில்லை. இப்படியே நாட்கள் சென்றன. பதின்மூன்றும் நாள் இரவு நல்ல 'நிலா வெளிச்சம். அதுடன் ஓர் பிரகாசமான 'லைட்' வெளிச்சம் கடலில் தெரிந்தது உடனே எமக்கு தெம்பு ஏற்பட்டது. நாம் மூவரும் பேச முடியாத நிலையில் இருந்தோம். நாக்கு வரண்டு உடல் ஒட்டி நடக்க முடியாத நிலையில் காலம் சென்ற இசிதோர் அறிவின்றி படுக்கையாகக் கிடந்தார். நாம் 'லைட்' வெளிச்சத்தைக் கண்டதும் நாம் உடுத்திருந்த உடுப்புகளைக் களைந்து கையில் பிடித்துச் சைகை காட்டினோம். சற்று நேரத்தில் வெளிச்சம் சமீபமாக வந்தது. பின்புதான் அது கப்பல் என்பதை அறிந்துகொண்டோம். அதன் பின் பசி, தண்ணீர் தாகம், பயம் யாவும் பறந்தன. எங்கள் படகுக்கருகாமையில் வந்த கப்பல். அதிலிருந்து இறங்கிய மாலுமிகள் எங்களை கப்பலில் முதலில் ஏற்றினர். பின்பு இசிதோரை ஏற்றினர். அவரின் நிலை கவலைக்கிடமாக இருந்தபடியால் சிகிச்சை அளித்தனர். ஆனால் விதிவிளையாடியது. இசிதோர் இறந்து விட்டார். அப்போது மூவரும் கவலையில் ஆழ்ந்தோம்.

#### கடலில் பிரேத அடக்கம்

பின்பு கப்பல் புறப்பட்டது. புறப்படுமுன் இசிதோரின் பிரேதத்துக்கு மரியாதை செலுத்திக் கடலில் அடக்கம் செய்தனர். பின்பு எமக்குக் குளுக்கோஸ், தோடம்பழரசம் தந்தனர். அதிலிருந்த திரு. ராஜு என்னும் கப்டன் எங்களை மிகவும் அன்புடனும் ஆதரவுடனும் கவனித்தார். மற்றய மாலுமிகளும் எம்முடன் அன்புடன் நடந்தனர். கப்பலில் இருந்து ஐந்தாம் நாள் (அதாவது 18 வது தினம்) கல்கத்தா அரசாங்கத்திடம் எம்மைப் பாரம் கொடுத்தனர்.

#### கல்கத்தாவில் அன்பான உபசாரம்

எங்களை மூவரையும் கல்கத்தா விடுதி வீட்டில் இருக்க ஒழுங்கு செய்தனர். உடைகள் தந்தனர். ஒவ்வொரு நாளும் காலையில் இரண்டு முட்டைகள் மற்றும் உணவு யாவும் தந்து எம்மை அன்புடன் உபசரித்தனர். எமக்கு 'சரஸ்வதி சபதம்', 'சந்திரகாந்தா' ஆகிய தமிழ்ப் படங்களையும் காட்டினர். மிருகக்காட்சி சாலையையும் கல்கத்தாபட்டினத்தையும் ... இருந்தோம். இன்று வருவதற்கு 5 நாட்களுக்கு முன்பு விமானத்தில் சென்னைக்குக் கொண்டுவரப் பட்டோம். பின்பு அங்கிருந்து விமானமூலம் கொழும்பை அடைந்தோம்.

---

### பேராதனையில்..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ளாம் தலைவன். குறிஞ்சிக் கிழவன். முதல் திணையாகிய குறிஞ்சித் திணைக்கு உரியவனாக, குறிஞ்சித் திணைக்குத் தெய்வமாக எல்லா மதத்தினரும் மாறுமல் கொள்ளுகின்ற பெருமையுடைய அந்தப் பெருமானை மலைமுகட்டின்மேல் கோயில்செய்து வழிபடுவதற்குரிய ஆலயத்தை அமைப்பது மிகமிகப் பொருத்தமாகும். மலையின் மேல் அழகுகள் செழுமியிருக்கும். குளிர்ச்சி நிரம்பியிருக்கும். பரப்பான பார்வையிருக்கும். முருகனுடைய அருட்கண் பார்வை பலவிடங்களிலும் பரவ வேண்டுமெனக் கருதி, அவனை மிகமிக உயரமாகிய மலையின்மேல் முன்னையோர்கள் வைத்துப் புகழ்ந்தார்கள். அதுமாத்திரமல்ல, சிவபெருமான் தனது திருத்தோளிலே வைத்துப் புகழ்ந்தார். பழநி மாமலையில் கனியாக நின்ற எம்பெருமான், தேவர்களும் மற்றையோரும் வந்து பாராட்டி, தங்கள் குறையை நிரப்பிக் கொண்டார்கள். யோக முறையின் மிக உச்ச ஸ்தானமாகிய த்வாரசாந்தத்தில் முருகன் எழுந்தருளியிருக்கின்றான். இத்தனை பிரகாரமாக மிகஉயர்ந்த இடத்தில் உன்னதமான இடத்தில் குமரகுருபரனாகிய முருகன் எழுந்தருள்வதற்கு உரியவன். அவனை யாரியார் உரிய இடத்தில் வைத்துப் பூசிக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் அவனால் வருகின்ற பேரருளாகிய உரிமை கிடைக்கும். அந்த உரிமை வாழ்வு நமக்கும் கிடைப்பதாக. இந்தப் பேராதனையில் முருகனின் ஆராதனை நிகழவேண்டுமென வாழ்த்துகிறேன். (முற்றும்)

---

### நாட்டிலும் நகரிலும்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இலக்கியப்பணிசெய்யும்தர்மரத்தினதேரோவும் கலைப்பணியாற்றும் பீரிஸும் இலங்கைக்கும், இந்தியாவுக்கும் உலகுக்கும் பொதுவான மனிதர்கள். பீரிஸின் உலகபிரக்யாதி பெற்ற சிங்களப்படங்களை இலங்கையில்தமிழர்வாழும் இடங்களிலும் காட்டப்படாதா? தர்மரத்தினதேரோவை தமிழ்ப்பகுதிகளுக்கு அடிக்கடி வரவழைத்து சொற்பொழிவுகள் ஆற்றுவிக்கப்படாதா? இத்தகையசெயல்கள் இனங்களிடையேதேசியஒற்றுமை வளரும்.

வழிப்போக்கன்

---

## பத்து வருடங்களில் நாடகக் கலையின் வளர்ச்சி

திருநெல்வேலி, செவ்வாய்

"பதினேழாம் நூற்றுண்டுக்கும் இருபதாம் நூற்றுண்டுக்குமிடைப்பட்ட கால எல்லைக்குள் கடைசி பத்து வருடங்களுக்குள் நாடகத்தின் அதிக வளர்ச்சியை நாம் காணக்கூடியதாக விருக்கின்றது. இதற்கு முக்கிய காரணம் ரசிகர்கள் மத்தியில் பரவி வரும் கலையுணர்ச்சி என்றுதான குறிப்பிடவேண்டும்."

மேற்கண்டவாறு யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. மண்டபத்தில் யாழ். பிரதேச கலாமன்றத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட விசேஷ கூட்டமொன்றில் பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்ட ஐரோப்பாவைச் சேர்ந்த திரு. ஸ்ருவட்ஸ் சிமித் பேசுகையில் குறிப்பிட்டார்.

வடமாகாண அரசாங்க அதிபர் திரு. வேரீணன் அபயசேகரா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. சிமித் தொடர்ந்து பேசுகையில் லண்டன் போன்ற மேல் நாடுகளில் சில நாடகங்கள் வருடக்கணக்கில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும், அண்மையில் ஒரு நாடகம் ஐந்து வருடங்களாகத் தொடர்ந்து மேடையேற்றப்பட்டு வந்ததாகவும், லோரன்ஸ் ஒலிவியர் போன்ற மேல்நாட்டு சினிமா நடிகர்கள் பலர் பல நாடகங்களில் நடிப்பதோடு நாடகங்களைத் தயாரித்தும் வருகின்றார்களென்றும், இதனாலேயே நாடகக் கலை ஒரு புத்துணர்வைப் பெற்றுள்ள தென்றும்தெரிவித்ததோடு, சினிமா, நாடகம் ஆகிய கலைகள் வரை பல யோசனைகளையும் எடுத்துரைத்தார்.

பிரதேசகலாமன்றச் செயலாளர் திரு. எஸ். சிவஞானம் நன்றி தெரிவித்துப் பேசுகையில் திரு சிமித் நாடகக்கலைவளர்ச்சிக்காகத் தெரிவித்த யோசனைகள் வரவேற்கக் கூடியவைகளென்றும் அவைகளை நாம் கடைப்பிடித்து அதன்படி நாடகங்களை அரங்கேற்ற வேண்டுமென்றும் சொன்னார்.

---

அசிரியருக்குக் கடிதங்கள்

## தமிழரின் எதிர்காலம்

இதுவரை இருந்தநிலையைவிட இலங்கைவாழ் தமிழ் மக்களின் நிலை எதிர்காலத்திற்சிறப்பாகஇருக்கும்என்பதற்கான அறிகுறிகள் காணப்படவில்லை. நிலைமைமோசமாகும் போலவேதோன்றுகிறது. பெரும்பான்மை சமூகத்தைச்சேர்ந்த ஒருஅரசியல்கட்சியை ஒரு தடவை ஆட்சிக்குக் கொண்டுவர உதவிபுரிவதும் பின்னர் மற்றொருகட்சியை ஆட்சிக்குக்கொண்டுவர உதவிபுரிவதும் நமக்கு நீண்டகாலத்துக்கு நன்மைபயக்கக் கூடியதாகத் தெரியவில்லை.

இதுவரை நாம் கடைப்பிடித்த அரசியல்முறைகளையும் கொள்கைகளையும் புனராலோசனை செய்து அரசியல் விவேகத்துடன் நடந்து கொள்ள வேண்டிய நிலைஏற்பட்டுள்ளது, தமிழ் மக்களின்தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பை அரசியல்வாதிகளிடம் பாரிலிமென்ட் அரசியல் வாதிகளிடம் மட்டும் இனியும் விடலாமா? கல்விமான்களும் சமூகத்தலைவர்களும் பொதுமக்களும் சிந்திக்கச்செயலாற்ற முன்வரவேண்டும். முன்வருவார்களா?

கோ. முத்துக்குமாரு
யாழ்ப்பாணம்

ஃ ஃ ஃ

### பாராட்டு

சுன்னாகப் பட்டினசபை முதன்முதலாக வரவு-செலவுத் திட்டத்தைத் தமிழில் தயாரித்து நிறைவேற்றியதற்கும், ஏனைய உள்ளூராட்சி மன்றங்களுக்கு முன்மாதிரியாக விளங்கியும், வழிகாட்டியாக நின்றமைக்கும், சுன்னாகப் பட்டின சபைக்கும், தலைவர் திரு. எஸ் கே. திருச்சிற்றம்பலத்துக்கும் மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக. இதைமுன்மாதிரியாகக்கொண்டு கல்முனைப் பட்டினசபையும் தமிழில் வரவு-செலவுத் திட்டத்தை தயாரித்து, நிறைவேற்றியதற்காகச் சபைக்கும், தலைவர் திரு. பி. நாகலிங்கத்திற்கும் நன்றி உரித்தாகுக. சபையின் கருமங்களை எவ்வளவுதூரம் தமிழில் ஆற்ற முடியுமோ ஆற்றுக. இதனை ஏனைய உள்ளூராட்சி மன்றங்களும் பின்பற்றவேண்டுமென்பதே தமிழ்மக்களின் வேணவா.

இ. சிறிஸ்கந்தராஜா
கன்னாகம்,
மயிலணி.

ஃ

### நிலை மாறவேண்டும்

டாக்டர் தஹநாயக்கா சொல்லியிருப்பது போல இலங்கையில், வீரகில் வேலைக்கு, சிறுர்களை அமர்த்தும் கேவலமான முறை ஒழியவேண்டும். நமது கிராமத்தில் சில வீடுகளில் இருக்கும் சில சிறுவர்கள் படும்பாடு சொல்லமுடியாது. எஜமாட்டிகளோ தங்கள் பழையநிலையை முற்றாக மறந்தவர்களாக இருக்கிறார்கள். இப்படியான சீமாட்டிகள் ஏன்தான் பிள்ளைகளைப் பெற்றார்களோ தெரியவில்லை. சிறுவர்கள் தினமும் சிறுசிறு விஷயங்களுக்கும் அடியும் உதையும் வாங்கிக் காலம் கழிக்க வேண்டியிருக்கிறது. நாங்கள் உங்கள் மகனைப் படிக்கவைக்கிறோமென்று ஆசை வார்த்தைகளால் பெற்றோரை ஏமாற்றிப் பிள்ளைகளைக் கொண்டுவந்து வேலைவாங்குகிறார்கள். இப்படிப் பட்ட கொடுமைகள் ஒழியவே ஒழியாதா?

க. ரவிச்சந்திரன்
சுதுமலை.

---

### மேற்றிராணியார் விஜயம்

முருங்கன் திங்கள்

யாழ் மேற்றிராணியார் மகா வந்தனைக்குரிய எமிலியானுஸ்பிள்ளை சென்ற கிழமை மன்னாருக்கு விஜயம்செய்தார். இவர் இங்கு 450க்குமேற்பட்ட சிறுவர் சிறுமியர்களுக்கு உறுதிபூசுதல் சடங்கை நிறைவேற்றினர். பின்னர் இவர் முருங்கன் தலைமன்னார் போன்ற இடங்களுக்கும் விஜயம் செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புகைவண்டியில் திருடர்கள்

எழுதுமட்டுவாள், திங். காங்கேசன்துறையிலிருந்து கொழும்புநோக்கிச் சென்றுகொண்டிருந்த மெயில் வண்டியில் பயங்கரத்திருட்டு ஒன்று நடந்தது. பிரயாணி காப்பிசாப்பிடுவதற்காக சிற்றுண்டிச்சாலைக்குச் சென்றசமயம்பார்த்து அவருடைய சூட்கேசை யாரோ ஒருநபர் தூக்கி வெளியேவீசிவிட, அதை கண்டுசிலர் சத்தமிட்டனர். உரிமையாளர் ஓடிவந்து அபாயச்சங்கிலியைப் பற்றி இழுத்து வண்டியை நிற்பாட்டினார். திருடர் தப்பியோடியபோதிலும், பெட்டி தேடிக் கண்டுபிடிக்கப் பட்டது. எழுதுமட்டுவாள் புகையிரத நிலைய அதிபர் திரு ந. கனகசபையினுடைய முயற்சியிலேயே அப்பெட்டி தேடிக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## லொறி குடைசாய்ந்தது

எழுதுமட்டுவாள், திங்கள் மலையிலிருந்து தேங்காய் ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த லொறி ஒன்று எழுதுமட்டுவாளில் பாதையைவிட்டு இறங்கி வேலியில் மோதி குடைசாய்ந்த சம்பவமொன்று இங்கே நடைபெற்றது. லொறி சாரதியின் பக்கமாக கவிழ்ந்தபோதிலும் சாரதிக்கோ மற்றும் ஊழியருக்கோ சேதமெதுவும் ஏற்படவில்லை.

## புதிய தலைமை ஆசிரியை

புன்னாலைக்கட்டுவன், திங். ஊரெழு ஸ்ரீ கணேசவித்தியாசாலைத் தலைமையாசிரியர் திரு. எஸ். கந்தையா இளைப்பாறியதைத் தொடர்ந்து இப்பாடசாலைப் பதில் தலைமை ஆசிரியையாக திருமதி இராணிநாயகம், தர்மலிங்கம் நியமிக்கப் பட்டுள்ளார்.

## வெளிநாடு செல்ல விரும்பும் ஆசிரியர் செய்யவேண்டியன

புன்னாலைக்கட்டுவன் திங். 'பாடசாலை விடுமுறைக் காலத்திலோ, அன்றி பாடசாலை நிகழுங்காலத்திலோ தென்னிந்தியா தவிர்ந்த ஏனைய வெளிநாடுகளுக்குச் செல்லவிரும்பும் ஆசிரியர் தாம் செல்ல விரும்பும் திகதிக்குக் குறைந்தது ஆறு மாதங்களுக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் என்றும் பாடசாலை நிகழுங்காலத்தில் தென்னிந்தியா செல்ல விரும்புவோர், செல்லவிரும்பும் திகதிக்கு முன்னர் குறைந்தது ஆறு மாதங்களுக்கு முன்னர் விண்ணப்பிக்கவேண்டுமென்றும், விடுமுறை காலத்தில் தென்னிந்தியா செல்ல விரும்புவோர் ஒரு மாத காலத்துக்கு முன் விண்ணப்பிக்கவேண்டுமென்றும் வடமாநில கல்வியதிபதி தமது சுற்றுநிருபம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இவ்வாசிரியர் தாம் தங்கிநிற்கும் வெளிநாட்டு முகவரியையும் தெரிவிக்கவேண்டும் என்றும் இதில் கூறப்பட்டுள்ளது.

## தேர்தல் ஆட்சேபமனு

வல்வெட்டித்துறை, திங். உடுப்பிட்டிக் கிராமசபையின் 13ம்வட்டார அங்கத்தவராகிய திரு. சுப்பையாதம் புவுக்கும் தேர்தல் அதிகாரியாக கடமையாற்றிய திரு. செல்லையா செல்வரத்தினம் ஆகியோருக்கும் எதிராக அவ்வட்டாரத்தில் போட்டியிட்ட அபேட்சகர் திருமதி தேவசிரோன்மணி முத்துராசாவினால் உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட மனு பிரதம நீதியரசர் திரு. எச். என் ஜி. பெர்னாண்டோ நீதியரசர் திரு. சமரவிக்கிரமா ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது பிரதிவாதிகளை கோர்ட்டில் ஆஜராகும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

வழக்காளிசார்பில் திரு பி. அமரசிங்கம் அனுசரணையுடன் திரு. வி. குமாரசாமி ஆஜரானார்.

# வல்வெட்டித்துறையில் கடல் அரிப்பு

வல்வெட்டித்துறை, திங். வல்வெட்டித்துறை மேற்கு கடற்கரையோரப் பகுதிகளில் வசித்து வரும் குடும்பங்களுக்கு ஆபத்து தோன்று நெருங்கி வந்துகொண்டிருப்பதாக அவதானிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியின் கரையோரத்தை கடலரித்துக் கொண்டேயிருக்கிறது. இவற்றை அப்பகுதிமக்கள் பட்டின சபைக்கு முறையிட்டதின் பேரில் துறைமுக கூட்டுத்தாபன பொறியியலாளர் திரு. வி. எஸ். கவைத்தி, நில அளவையாளர் திரு. எஸ் ஜே பீரிஸ், பட்டினசபைத் தலைவர் திரு. வி. இரத்தின வடிவேலு ஆகியோர் அப்பகுதிகளை பார்வையிட்டு அதற்குரிய நடவடிக்கைகளை விரைவில் எடுப்பதாகத் தெரிவித்துச் சென்றுள்ளனர்.

## இந்துமாமன்ற அறிக்கை

கொழும்பு, திங்கள் 'கதிர்காமத்தில் வல்லாண்டுகளாகப் புனித மடாலயங்களாக இருந்தவற்றை பக்தர்களின் நன்மையை முன்னிட்டு அகற்றப்படக்கூடாதென அரசாங்கத்தை இந்துமாமன்றம் வற்புறுத்திக் கேட்டுள்ளது."

இவ்வாறு அகில இந்து மாமன்றம் பதின்மூன்றாம் ஆண்டறிக்கையில் தெரிவித்துள்ளது.

காலஞ்சென்ற சேர் கந்தையா வைத்தியநாதனின் சேவை இந்துசமயவிடுமுறை சைவ மாணவர்களுக்கு ஊக்கமூட்டல் பற்றிய விடயங்கள்பற்றியும் ஆண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஊரெழுவிற் சிரமதானம்

புன்னாலைக்கட்டுவன், திங். ஊரெழு கி. மு. ச. ஆதரவின்கீழ் நேற்று நடைபெற்ற சிரமதானத்தின் மூலம் சிலவொழுங்கைகள் துப்புரவாக்கப்பட்டதுடன் சில பொதுப்பாதைகளும் திருத்தப்பட்டன.

## தங்க இடமில்லை

பண்டத்தரிப்பு, திங்கள் சண்டிலிப்பாய்— கீரிமலை, மாதகல்— கீரிமலை, பருத்தித்துறை, இளவாலை ஆகிய மூன்று பஸ் சேவைகள் இளவாலைக்கூடாக நடைபெறுகின்றன. நிலைமை இப்படியிருந்தும் பிரயாணிகள் வெய்யிலிலும் மழையிலும் கஷ்டமுறவேண்டியுள்ளனர். பிரயாணிகள் தங்க இடமில்லாமையே இதற்குக் காரணம்.

## சிறகு வலைத் திருட்டு ஒழிகிறது


திருநெல்வேலி, செவ் கடந்த சில மாதங்களாக யாழ்ப்பாணத்தில் பரவி வந்த சிறகுவலைத் திருட்டு தற்போது முற்றாகஒழிக்கப் பட்டுவிட்டதாகத் தெரிகின்றது. சிறகுவலை மீன்பிடியாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க அரசாங்கத்தால் வழங்கப்பட்டிருக்கும் அதிவேக 'லோஞ்சில்' பொலிஸ் ஊழியர்களுடன் கரையூர், பாஷையூர், நாவாந்துறை, குருநகரைச் சேர்ந்த தொண்டர்படையினரும் இரவு நேரங்களில் கடலில் ரோந்து சுற்றுகின்றனர்.

இதன்பயனாக கடந்த இரண்டு வாரங்களில் இப்பகுதிகளில் ஒரு சிறகுவலைதானும் களவுபோகவில்லையெனவும் தொடர்ந்து தொண்டர்படையினரும் பொலிஸாரும் கூட்டாக இரவு நேரங்களில் ரோந்து சுற்றுவார்களானால் யாழ்ப்பாணம் பகுதியில் அதிகரித்து வந்த சிறகுவலைத் திருட்டு முற்றாக ஒழிந்துவிடுமெனவும் யாழ்ப்பாணம் மீன்பிடி இலாகாவைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.


மற்றவர்களை முந்திச் செல்ல

BSA

பி. எஸ். ஏ.
கோல்டின் டிலக்ஸ்
ரேட்ஸ்டர் சைக்கிள்களையே
தெரிவு செய்யுங்கள்



- உலகிலேயே மிகச் சிறந்த சைக்கிள்
- நீடித்த உறுதி வாய்ந்தது
- வசதிக்குச் சாதகமான அமைப்பு
- 'டெரி-டைப்' சீட்டுகள்

துரிதமான பாதுகாப்பான ஓட்டத்துக்கு
ஒரு பி. எஸ். ஏ. யில் செல்லுங்கள்

ஏகவிநியோகஸ்தர்கள்:

கார்கில்ஸ் (இலங்கை) லிமிடெட்


## கூப்பன்

1. யான் 18 வயதுக்கு மேற்பட்டவன் / உட்பட்டவன் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகிறேன். யான் முதலாவது / இரண்டாவது போட்டியில் பங்குபற்றுகிறேன். (தேவையற்ற சொல்லை வெட்டிவிடவும்.)

2. இந்த சைக்கிள் போட்டி சம்பந்தமான சட்டங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட நடந்துகொள்வேன்.

பெயர்: ..............................

விலாசம்: ..............................

இலக்கம்: ..............................

[பி. எஸ். ஏ. சைக்கிளின் பிறேம் (frame)]

(கோட்டின் வெட்டி எடுக்கவும்)

# 'ஈழநாடு' சைக்கிள் ஓட்டப்போட்டி விபரங்கள்

ஜனவரி 1, 1967 — பி. ப. 4·00 மணி

## முதலாவது ஓட்டப்பந்தயம்
## மாணவர் போட்டி

ஐந்துமைல் — யாழ். கோட்டையைச் சுற்றி

| | |
|---|---|
| முதலாவது பரிசு: | பி. எஸ். ஏ. சைக்கிள் |
| இரண்டாவது பரிசு: | கிரிக்கெட் மட்டை |

ஜனவரி 1, 1967 — பி. ப. 4 30 மணி

## இரண்டாவது ஓட்டப்பந்தயம்
## வயது வந்தோர் போட்டி

பத்துமைல் — யாழ். கோட்டையைச் சுற்றி

| | |
|---|---|
| முதலாவது பரிசு: | பி. எஸ். ஏ. சைக்கிள் |
| இரண்டாவது பரிசு: | தூய வெண்கலத்தட்டு (ட்ரே) |

## விதிகளும் நிபந்தனைகளும்
## முதலாவது ஓட்டப்பந்தயம்

1. பங்குபற்றுவோர் யாவரும் ஜனவரி 1, 1967-ல் 18 வயதோ அல்லது அதற்குக் குறைந்தவர்களாகவோ இருக்க வேண்டும்.
2. பந்தயத்தில் பங்குபற்றப் போதிய உடலுறுதியுள்ளவர்களாக இருக்க வேண்டும்.
3. 'ஈழநாட்'டில் வெளியாகும் கூப்பன் பத்திரங்களிலேயே எல்லா விண்ணப்பங்களும் அனுப்பப்பட வேண்டும்.
4. பங்குபற்றுவோர் பி. எஸ். ஏ. சைக்கிள்களிலேயே ஓட வேண்டும்.
5. விண்ணப்ப முடிவு திகதி: டிசெம்பர் 15, 1966.
6. முடிவு திகதிக்குப் பின் அனுப்பப்படும் விண்ணப்பமெதுவும் ஏற்றுக் கொள்ளப்படாது.
7. ஒட்டப்பந்தய முடிவுக்குப்பின் எவ்விதக் கடிதத் தொடர்பையும் "ஈழநாடு" ஏற்காது.
8. மத்தியஸ்தர்களின் தீர்ப்பே முடிவானதாகும்.
9. ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் 5 கூப்பன்கள் இணைக்கப்பட வேண்டும்.

## இரண்டாவது ஓட்டப்பந்தயம்

இதில் கலந்துகொள்வோர் யாவரும் ஜனவரி 1, 1967-ல் 18 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

மற்றும்படி முதலாவது ஓட்டப்பந்தயத்துக்கான விதிகளும், நிபந்தனைகளும் இரண்டாவது ஓட்டப்பந்தயத்துக்கும் உரியனவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## மந்திரியும் சபாநாயகரும்

சென்னை, நவ.28
எதிர்வரும் பொதுத் தேர்தலில், மந்திரி மன்ருடியர், பெருந்துறைத் தொகுதியிலும், தமிழ்நாட்டு சட்டசபை சபாநாயகர் செல்லபாண்டியன் ஆலங்குளத் தொகுதியிலும் போட்டியிடுவதாக அறியப்படுகிறது.

## தீ விபத்து: நடிகர்கள் உதவி

சென்னை, நவ 28
புதுப்பேட்டையில் பயங்கரமான தீவிபத்து ஏற்பட்டது. 300 வீடுகள் எரிந்து சாம்பராயின. 2000க்கு மேற்பட்டவர்கள் வீடிழந்து தவிக்கின்றனர். இவ்விபத்திஞல் பாதிக்கப்பட்டவர்களுக்கு நடிகர் எம்.ஜி.ஆர் ரூபா 10 ஆயிரமும், சிவாஜி கணேசன் ரூபா 5 ஆயிரமும் டைரக்டர் ஸ்ரீதர் ஆயிரம் ரூபாவும் உதவியுள்ளனர்.

## கைகலப்பு

கும்பகோணம், நவ. 28
காங்கிரஸ்தலைவர் காமராஜர் வீட்டுக்குத்தீவைத்ததைக்கண்டிக்குமுகமாக இங்குள்ள கல்லூரி ஒன்றின் மாணவர்கள் கறுப்புச் சின்னம் அணிந்து வந்ததாகவும் அதை ஒரு மாணவர் எதிர்த்த பொழுது மாணவர்களுக்கிடையில் கைகலப்பு ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது. கல்லூரியைச் சுற்றி பலத்த பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டிருக்கிறது.

## தண்டனை

வேலூர், நவ.28
இங்கு பாலில் தண்ணீர் கலந்து விற்ற குற்றத்துக்காக பால் வியாபாரி ஒருவருக்கு ரூபா 1000 அபராதமும் ஆறுமாதச் சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டது.

## விடுதலை

வேலூர், நவ.28
கொலை வழக்கொன்றில் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட கருப்பையா என்பவரும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட அவரோடு சேர்ந்த ஏழு பேரும் சென்னை மேல் கோர்ட்டில் விடுதலைசெய்யப்பட்டிருக்கின்றனர்.

## பூநகரி பஸ் சேவை படுமோசம்

பூநகரி, திங்.
பூநகரியின் பஸ் சேவை பல நாட்களாக மிகவும் மோசமான நிலை அடைந்துள்ளதாக பிரயாணிகள் இ.போ.ச அதிகாரிகளுக்கு புகார் செய்துள்ளனர். பூநகரி-சங்குப்பிட்டிக்கு ஏழு பஸ்சேவைகள் இருந்தும் அண்மையில் சில தினங்களாக இரு சேவையே நடைபெற்றுவருகின்றன.

நேர சூசியை மாற்றியமைக்கும்படியும், பூநகரி, சங்குப்பிட்டிக்கு ஒருசேவையை ஏற்படுத்தும்படியும் பொதுமக்கள் இ.போ.ச. முகாமையாளரைக் கேட்டுள்ளனர்.

## ரயில் பாதை விஸ்தரிப்பு

கொழும்பு, திங்கள்
புத்தளத்திலிருந்து சிமெந்து தொழிற்சாலை நிறுவப்படும் இடமான அறுவாக்கலுவுக்கு ரயில் பாதையை விஸ்தரிக்கும் வேலைக்கு இலங்கை ரயில்வேக்கு ரூ 5 கோடி 50 லட்சம் செலவாகுமெனத் தெரிகிறது.

# அல்வாயில் சுகாதார மாதிரிக்கிராமம்

உடுப்பிட்டி, திங்கள்
அல்வாய்க் கிராமத்தை சுகாதார மாதிரிக்கிராமமாக்குவது பற்றி கலந்துரையாடல் கூட்டம் அல்வாய் மெதடிஸ்த மிஷன் பாடசாலை மண்டபத்தில் சென்ற வெள்ளிக்கிழமையும் சனிக்கிழமையும் நடைபெற்றது. வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஆலோசனைக்கூட்டத்தில் பருத்தித்துறை சுகாதாரவைத்திய அதிகாரி டாக்டர் திரும எம் அருளம்பலம் திருவாளர்கள் எஸ். பொன்னம்பலம், வி. தம்பித்துரை, எம். மதியாலசிங்கம், டாக்டர் கே. அழகரத்தினம் ஆகியோர் பங்கு பற்றினர்.

மறுநாள் நடைபெற்ற கருத்தரங்கில் டாக்டர் திருமதி எம். அருளம்பலம் டாக்டர் தேவராசன், திருவாளர்கள்: பி. கணேசமூர்த்தி, வி. பி. ஐயாத்துரை, எஸ். பொன்னம்பலம் முதலியோர் கலந்து கொண்டனர் அன்றைய தினம் மாலை அல்வாய் மாதிரிச் சுகாதாரக் கிராமம் அமைப்பது பற்றி பொதுமக்களுக்கு விரிவாக விளக்குவதற்காகத் திரு. வீ. மகேசுவரன் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் திருவாளர்கள் எம். தில்லைநாதன், வீ ஆறுமுகம், எஸ் பொன்னம்பலம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். திருவாளர்கள் ப. பெஞ்சமின் எஸ். சண்முகம்பிள்ளை ஆகிய இருவரும் அல்வாய் சுகாதார சபையின் இணைச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டனர்.

## சேவைநலம் பாராட்டு

அளவெட்டி, திங்கள்
அளவெட்டி கிராம முன்னேற்ற சங்கக் காரியதரிசியாகக்கடமையாற்றிய திரு. வை. சுப்பிரமணியம், விவசாயப் போதனாசிரியராக கடமையாற்றச் செல்வதையிட்டு அளவெட்டி மகாஜன வாசிகசாலை மண்டபத்தில் பண்டிதர் திரு. க. நாகலிங்கம் தலைமையில் அவருக்கு அளவெட்டி கிராம முன்னேற்றச் சங்கத்தினர்களால் சேவை நலம் பாராட்டுக் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

## மலேசியத் தலைவர் பூட்டோவை கண்டித்தார்

கோலாலம்பூர், நவ. 28
அண்மையில் பாகிஸ்தான் முன்னுள் வெளிவிவகார மந்திரி திரு. சுல்பிக்கார் அலி பூட்டோ, பாகிஸ்தான் உயிர்வாழ வேண்டுமெனில் இந்தியாவைச் சகல துறைகளிலும் பகிஷ்கரிக்க வேண்டுமெனக் குறிப்பிட்டிருந்ததை, மலேசியத் தலைவர் ஒருவர் இங்கு வெகுவாகக் கண்டித்தார்

வட மலாய ராஜ்யமான பேர்லிசின் முதல் அமைச்சரான திரு. தான்சிறிசேக் அஹமத். அரசியற் கூட்டமொன்றில் பேசுகையில், திரு. பூட்டோவின் அறைகூவல் வெறுக்கத் தக்கதாகும் எனக் கூறிப்பிட்டார்.
பி. டி. ஐ.

## போயா தினத்தில் பரீட்சை

கண்டர்த்தமிப்பு, திங்.
இங்குள்ள பல பாடசாலைகளில் வடமாகாண ஆசிரியர் சங்கத்தாரால் நடாத்தப்படும் 6-ம் வகுப்புப் பரீட்சை போயா தினத்திலே நடைபெற்றது.

## ஜீவனும்சம் கட்ட உத்தரவு

வல்வெட்டித்துறை, திங்கள்
சரோஜினி தேவி என்பவர் தனது கணவனுன விஜயரத்தினம் என்பவரிடமிருந்து ஜீவனும்சம்கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. ரொபர்ட் சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையின்பின் மாஜிஸ்திரேட் சரோஜினி தேவிக்கும் அவரது குழந்தையான திபாகலிங்கத்திற்கும் மாதம் 60 ரூபா வீதம் ஜீவனும்சப் பணமாக கணவனுன விஜயரத்தினத்தை கட்டும்படி உத்தரவிட்டார்.

## திருக்கார்த்திகை விழா

சங்கானை, திங்கள்
சங்கானை இலுப்பைத்தாழ் முருகமூர்த்தி கோயிலில் விசேட அபிஷேக ஆராதனைகளின் பின் திருக்கார்த்திகைத் திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

## மருந்துத் தட்டுப்பாடு

பூநகரி, திங்கள்
பூநகரி கிராமசபை ஆயுள்வேத இலவச வைத்தியசாலையில் மருந்துத்தட்டுப்பாடு ஏற்பட்டதால் நோயாளிகள் கஷ்டப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஆயுள்வேதடாக்டர் பொ. சு. இராசரத்தினம் இதுசம்பந்தமாக கிராமசபைத்தலைவருக்கு புகார் செய்துள்ளார் எனத்தெரிய வருகிறது.

## கடையில் களவு

மன்னா, திங்.
பனைமிலுள்ளளம், லெப்பை என்பவரது கடையில் இனம் தெரியாத நபர்கள் புகுந்து 500 ரூபா பெறுமதியான பொருட்களைக் களவாடிச் சென்றுள்ளதாக தெரிய வருகிறது. மன்னா பொலிசார் ஸ்தலத்திற்குச்சென்று விசாரணை நடத்தினர். இது சம்பந்தமாக எவரும்கைது செய்யப்படவில்லை.

## திருக்கல்யாணம்

வல்வெட்டித்துறை. திங்கள்
தொண்டமானுறு செல்வச் சந்நிதி வள்ளியம்மன் திருக்கல்யாண வைபவம் வருகிற புதன்கிழமை நடைபெறவிருக்கிறது. அன்றைய தினம் புராணப் படிப்பின் இறுதியும் முடிவடைகிறது.

## மனோகராவுக்கு வெற்றி

உடுப்பிட்டி, திங்
அல்வாய் மனோகராக்கழக மைதானத்தில் அல்வாய் மனோகராக் கோஷ்டிக்கும் கட்டுவன் ஞானோதயாவிளையாட்டுக் கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் மனோகராக்கோஷ்டி ஞானோதயாக் கோஷ்டியை 1-0 கோலால் வெற்றியீட்டியது. இப் போட்டிக்கு திரு. எஸ். சத்தியநாதன் மத்தியஸ்தம் வகித்தார்.

## யாழ்ப்பாணக்கல்லூரி வெற்றி

சுழிபுரம், திங்கள்.
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டதாரி மாணவ கோஷ்டிக்கும் அரியாலை ஐக்கியகழக கோஷ்டிக்குமிடையில் சிநேகித பூர்வமாக நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணக்கல்லூரிக் கோஷ்டியினர் அமோக வெற்றிபெற்றனர். யாழ்ப்பாணக்கல்லூரி கோஷ்டியினர் 6 கோல்களைப் போட்டனர். அரியாலைக் கோஷ்டியினர் இரண்டுகோல்களை மட்டும்போட்டனர். யாழ்ப்பாணக்கல்லூரி மைதானத்தில் போட்டி நடைபெற்றது. திரு எஸ். துரைரத்தினம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

## ஹலிவூட் வெற்றி

சண்டிலிப்பாய். திங்
சண்டிலிப்பாய் ஹலிவூட் விளையாட்டுக்கழகத்துக்கும் நவாலி விளையாட்டுக்கழகத்துக்குமிடையில் நவாலிவிளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற தாச்சிப் போட்டியில் ஹலிவூட் கழகம் வெற்றிபெற்றது. இப் போட்டிக்கு எஸ். இராசதுரை மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

சிங்கள

## படத் தயாரிப்பாளர் மரணம்

கொழும்பு, திங்கள்
தயாரிப்பாளரான திரு. ஆர். ராஜபாலி, நேற்றுக்காலை வெள்ளவத்தையிலுள்ள நர்ஸிங் ஹோமொன்றில் மாரடைப்பினுல் காலமானுர்.

இவர் 'தலைவா காகெத', 'ஹெற்ற பிரமாத வடி', 'சித்தக்க பஹிம' 'சுவீப் டிக்கெட்', 'கச துவா' ஆகிய ஐந்து சிங்களப் படங்களைத் தயாரித்துள்ளார்.

## இன்னமும் திருத்தப்படவில்லை.

மூதூர் திங்கள்
1964—ம் வருடத்தில் ஏற்பட்ட சூருவளியின் போது வங்காலைமெயின் வீதியிலுடைபட்ட இரண்டு பாலங்கள் இன்னமும் சீராக்கப்படவில்லை.

## அன்னிய செலாவணி குறைக்கப்படும்

கொழும்பு. திங்கள்
குறிப்பிட்ட அளவு அன்னிய செலாவணியே இருப்பதால், அடுத்த வருடத்துக்குக் கேட்கப் பட்டுள்ளதிலும் பார்க்கக் குறைவாகவே அந்நிய செலாவணி அளிக்கப்பட வேண்டுமென பல அரசாங்க இலாகாக்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளன.

அடுத்த வருடத்துக்கு அரசாங்க இலாகாக்களுக்கு மொத்தம் ரூ 20 கோடி வழங்கப்பட்டுள்ளது அவற்றின் மொத்தக் கோரிக்கை இதனிலும் நான்கு மடங்காகும்.

## இடமாற்றம்

உடுக்கல், புதன்
திருகோணமலைப்பகுதியைச் சேர்ந்த அல்லை, பன்குளம் முதலிய இடங்களில் குடியேற்ற அதிகாரியாகப்பல வருடங்களாகக் கடமையாற்றிவந்த திரு. க. நவரத்தினம் அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் சம்மாந்துறைப் பகுதிக்கு குடியேற்ற அதிகாரியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அவருடைய சேவையைப் பாராட்டி ஒரு பிரிவு உபகாரவிழா அல்லை கங்குளம் பகுதியில் நடத்த குடியேற்றத்திட்ட மக்கள் தீர்மானித்துள்ளார்கள்


வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

பவரின்
காய்கறிப் போனை



ஏ. பவர்

இந்தக் குடும்பத்துக்குப் பிரகாசமான எதிர்காலமுண்டு....

நம்பிக்கை சுடர் விட்டுப் பிரகாசிக்கிறது; காரணம், அவர்களின் அங்கத்தின் ஒவ்வோர் அணுவிலும் ஆரோக்கியத்தின் பூரிப்புப் பொங்கித் ததும்புவதாகும். அப்பா எப்பொழுதும் சுகமும் பலமுமுள்ளவராய் இருக்கிருர். அம்மா என்றுமே குன்ருஇளமையும், குலையா வனப்புமுள்ளவராய்க் காட்சியளிக்கிருர். இரண்டு குழந்தைகள். எந்தப் பெற்ருேர்தான் இவர்களைப் பார்த்துப் பெருமையடையாதிருப்பர். இதுவே செவன் சீஸ் அளிக்கும் ஆரோக்கியம். உச்ச போஷாக்குள்ள எண்ணெயில் விட்டமின் ஏ., டி. ஆகிய சத்துக்கள் இயற்கையாகவே செறிந்திருக்கும் பொருளே செவன் சீஸ் கொட் லிவர் எண்ணெய். செவன் சீஸ் கொட் லிவர் எண்ணெய் அதன் பூர்வ கொள் கலத்தில் நேரே உங்களுக்குக் கிடைக்கிறது.



செவன் சீஸ்

செழுமை மிக்க பொன்னிற கொட் லிவர் எண்ணெய், குளிகைகள்.

உற்பத்தியாளர்களின் சொந்தப் போத்தலிலேயே அடைக்கப்பெற்ற அசல் செவன் சீஸ் கொட் லிவர் எண்ணெயே வேண்டுமென்று கேளுங்கள்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'ரத்வத்தையிடம பணம் கொடுத்ததைக் கண்டேன்'

## லஞ்ச வழக்கில் பாப்புராஜ் சாட்சியம்

கொழும்பு, திங்கள் பிரஜாவுரிமை பெற்றுத் தருவதற்கு ஐயாயிரம் ரூபாய் தரவேண்டுமென டாக்டர் சிவரத்தினம் கேட்டதாகவும் இத்தொகையைக் கொடுக்க ஒப்புக்கொண்டதுடன் இரண்டு தவணையாக இது கொடுக்கப்பட்டதாகவும் இத்தொகையை டாக்டர் சிவரத்தினம் டாக்டர் மகிரத்வத்தையிடம் சித்ரா ஒழுங்கையில் வைத்து ஒரு தொகையையும் பலாங்கொடையில் வைத்து மற்றுத் தொகையையும் கொடுத்ததாகவும் டாக்டர் மகிரத்வத்தைக்கு எதிரான லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு வழக்கில் சாட்சியமளித்த முக்கிய சாட்சியான எஸ். எல். பி. பாப்புராஜ் இன்று கூறினர்.

டாக்டர் மகிரத்வத்தை மீதும் டாக்டர் ஏ. ஆர். சிவரத்தினம் மீதும் லஞ்சம் வாங்கியதாக குற்றம் சாட்டித் தொடரப்பட்டுள்ள வழக்கு இன்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது திரு. எஸ். எல். பி. பாப்புராஜ் சாட்சியமளித்தார்.

தாம் ஓர் இந்தியர் என்றும் ஆனால் இப்பொழுது இலங்கைப் பிரஜை என்றும் கூறிய பாப்புராஜ் தாம் கருவாடு வர்த்தகத்திலும் ஈடுபட்டிருந்ததாகத் தெரிவித்தார். முடிக்குரிய தரப்பில் ஆஜரான அட்டர்ணி ஜெனரல் திரு. ஏ. ஸி. எம். அமீர் சாட்சியை விசாரணை செய்தார்.

தனது நண்பரான சாலி முகம்மதுவின் மகளை சுல்தான்காதர் என்னும் இந்தியர் மணம் செய்துகொண்டதாகவும் மணமகன் சுல்தான்காதருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை பெறவேண்டுமென்று சாலிமுகம்மதுவும் அப்துல்சலாம் என்பவரும் தம்மிடம் ஒரு நாள் வந்து கூறியதாகவும் தாம் அப்துல்சலாம், சுல்தான்காதர், சாலிமுகம்மது ஆகியோரை அழைத்துக்கொண்டு இப்பொழுது அரசாங்கசேவைக் கமிஷன் தலைவராக இருக்கும் வழக்கறிஞரான திரு. ஈ. ஏ. நுகவெல்லவைச் சந்திக்கச் சென்றதாகவும் பாப்புராஜ் கூறினர். 'இதில் தாம் ஒன்றும் செய்வதற்கில்லை என்றும்' அவர் கூறினாரென்றும் பின்னர் இப்பொழுது சதி வழக்கில் முதல் எதிரியாக இருக்கும் லெனை ஞானசிக தேரோவைச் சந்திக்கச் சென்றதாகவும் கூறினர். "இதன்பின் நாங்கள் இரத்தினபுரியில் பாத்த கடைக்குச் சென்றோம். பின்னர் வெள்ளவத்தையிலுள்ள சர்வதேச பௌத்த சங்க நிலையத்தில் ஞானசிக தேரோவைச் சந்தித்தோம். அங்கு 'லைல்' கனி வாங்கிப்பார்த்த ஞானசிக தேரோ பாதுகாப்பு வெளிவிவகார அமைச்ச உதவிக்காரியதரிசி திரு. எக்கநாயக்காவுக்கு கார் அனுப்பினர். திரு. எக்கநாயக்கா லைல் கனியைப் பார்வையிட்டபின் தம்மால் இதில் ஒன்றும் செய்வதற்கில்லை என்று கூறிவிட்டார். திரு. என். இயு. டயஸையோ அல்லது பிரதமர் சிறிமாவுக்கு நெருங்கிய தொடர்புள்ளவர்களையோ சென்று சந்திக்கும் படியும் யோசனை கூறினர்.

இதன்பின் நாங்கள் லயாரிட் குணசேகராவைச் சந்தித்தோம். அவர் பலாங்கொடையில் கினிமோரிட் ரத்வத்தையைச் சந்திக்கும்படி கூறினர். நாங்கள் பலாங்கொடைக்குச் சென்றோம். அங்கு அவர் இல்லை. திரும்பும் வழியில் டாக்டர் சிவரத்தினம் வீட்டுக்குச் சென்றோம். அவரிடம் இது பற்றிச் சொன்னதும் தாம் டாக்டர் மகிரத்வத்தையிடம் கூறி பிரஜாவுரிமை பெற்றுத் தருவதாகச் சொன்னர். ஆனால் பணம் கொடுக்கவேண்டுமென்று அவர் கூறினர். கொடுக்க மதித்து எவ்வளவு கொடுக்கவேண்டுமென்று கேட்டோம். அதற்கு அவர் 'ஐயாயிரம் ரூபாய்' என்று பதிலளித்தார். அதற்குச் சம்மதித்தும் முற்பணம் கொடுக்க வேண்டுமென்றர். அதற்கு ஒப்புக்கொண்டு ஆயிரம் ரூபாய்க்கு 'செக்' எழுதிக் கொடுத்தோம். 'செக்' தர வேண்டாமென்றும் ரொக்கமாகத் தரும்படி கூறினராம் மறுநாள் கொண்டுதருவதாகக் கூறிச்சென்று அடுத்தநாள் சென்றோம் அவரும் நாங்களும் அடுத்தநாள் காரில் சித்ரா ஒழுங்கைக்குச் சென்றோம் டாக்டர் சிவரத்தினத்திடம் ஆயிரம் ரூபாய் கொடுத்தோம் அவர் ஒரு வீட்டுக்குள் சென்று ஆயிரம் ரூபாயையும் அங்கிருந்த ஒருவரிடம் கொடுத்தார். அவர்தான் மகிரத்வத்தை.

அடுத்தநாள் எங்களை மிகுதி நாலாயிரம் ரூபாயுடன் வரும்படி சொன்னர். மறுநாள் நாங்கள் சென்றோம் அங்கு அவர் இல்லை. பலாங்கொடைக்குப் போய் விட்டதாகச் சொன்னர்கள் நாங்கள் பலாங்கொடைக்குச் சென்றோம் அங்கும் இவர் இல்லை. வாடி வீட்டில் இரவு தங்கினோம். மறுநாள் மகிரத்வத்தையின் பங்களாவுக்குச் சென்றோம் அங்கு சிவரத்தினத்திடம் நாலாயிரம் ரூபாயையும் கொடுத்தோம். அவர் உள்ளே சென்று அங்கிருந்த ஒருவரிடம் கொடுத்தார்: அவர் சித்ரா ஒழுங்கையில் பணம் வாங்கியவர்தான். இதன்பின் பாதுகாப்புவெளிவிவகார அமைச்சின் உதவிக்காரியதரிசி திரு. ஸ்டான் விஜய வீராவிக்கு ஒரு கடிதம் கொடுத்தார் பின்னர் அக்கடிதத்தை செனட்சபைக் கட்டத்திலுள்ள காரியாலயத்தில் திரு. நயவீரரிடம் கொடுத்தோம் அவர் பார்த்துவிட்டுகவனிப்பதாகச் சொன்னர். நாட்களாகியும் ஒருபதிலுமில்லை. டாக்டர் சிவரத்தினத்துக்கு கடிதங்கள், தந்திகள் அனுப்பினோம் ஒரு பதிலுமில்லை. இறுதியில் கவனிப்பதாகத் தெரிவித்தார்" என்று திரு. பாப்புராஜ் தமது சாட்சியத்தில் கூறினர்.

இதற்குமுன் திரு. கினிபோரிட் ரத்வத்தை சாட்சியமளிக்கையில் தாம் பார்லிமெண்ட் வட்டாரங்களில் மகிரத்வத்தைக்கு எதிராக லஞ்ச வழக்குத் தொடரப்படவிருப்பதாகக் கேள்விப்பட்டதும் மகிரத்வத்தையைச் சந்தித்துக்கேட்டபோது அவர் அதைக்கேட்டுத் திகைப்படைந்தாரென்று கூறினர்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலவீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு நவம்பர் மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

### பணப்பையை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுள்ள அவருடைய வாக்குமூலத்தை பொலிசார் பதிவதில் ஈடுபட்டிருக்கின்றார்கள்.

ஆனால் சுட்டவர்கள் பற்றிய தகவல் ஒன்றும் இன்னும் கிடைக்கவில்லை,

### ஆஸ்பத்திரி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாதெனவும் தெரியவருகிறது.

#### யாழ். ஆஸ்பத்திரியில்

தாய்ச்சங்கத்தின் அறிவித்தலைத்தொடர்ந்து யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் வைத்திய ஆய்வு கூட நுண்கலைஞர்கள் நேற்றுக்காலையிலிருந்து வேலைநிறுத்தத்தில் இறங்கியுள்ளனர்.

மேற்படி ஆய்வுகூடத்தில் கடமையாற்றும் ஊழியர்களில் லீவில் நிற்கும் ஏழு ஊழியர்களைத் தவிர பதினொரு நுண்கலைஞர்களும் இரண்டு ஆய்வுகூட உதவியாளர்களும் இவ்வேலைநிறுத்தத்தில் பங்கு கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் [illegible] மார்பு நோய் சிகிச்சை நிலையத்திலும் ஒரு ஊழியர் வேலைநிறுத்தத்தில்பங்குகொண்டிருப்பதாகவும் இன்னெருவர் வேலைக்கு வருவதாகவும் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி ஆய்வுகூட நுண்கலைஞர்களது வேலைநிறுத்தம் காரணமாக நேற்றுக்காலையிலிருந்து இப்பகுதிவேலைகள் முற்ருகத் தடைபட்டுள்ளனவாம்.

### 2 பேர் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாமூல்நிலை ஏற்பட்டதாகவும் வெடில் அடித்ததாகவும் அறிவிக்கப்பட்டது. பல இடங்களில் கடும்மழை பெய்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. காற்றின் வேகத்தினல் ஏராளமான குடிசைகள் பறந்துவிட்டன இதனல் குடிசை வாசிகள் பலர் வசிப்பிடங்களை இழந்தனர்.

### ஒழுங்கு நடவடிக்கை எடுக்க முடிவு

கொழும்பு, திங்கள் தொடங்கஸ்லாந்தை தொகுதியில் சுயேச்சையாகப் போட்டியிடும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அங்கத்தவர் திரு. எம். டி. சமரப்பாலமீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஒழுங்குக் கட்டுப்பாட்டுக் குழு முடிவுசெய்திருக்கிறது. இவர் ஸ்ரீலங்காசுதந்திரக் கட்சியின் முக்கிய அங்கத்தவராய் இருந்தார் தொடங்கஸ்லந்தை தொகுதியில் [illegible] சுயேச்சையாக போட்டியிடுகின்றர்.

### மாவட்டசபைகள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படவேண்டுமென்றும், அடுத்து வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குவதற்கான முயற்சிகள் அவசரமாக மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும், அதுவரை சர்ச்சைக்குரிய மசோதாக்கள் அவசரமாக மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் அதுவரை சர்ச்சைக்குரிய மாவட்டசபைகள் மசோதாவை ஒத்திவைக்கலாமென்றும் தாம் அந்தக்கூட்டத்தில் யோசனை கூறியதாக திரு. தேவநாயகம் தெரிவித்துள்ளார். தான் இவ்விதம் கூறியதும் திரு. அமிர்தலிங்கம் 'ஆவேசம்' வந்ததுபோல் துள்ளி எழுந்து தம்மீது சீறிப்பாய்ந்ததுடன். யு.என்.பிக்கும் தமிழரசுக்கட்சிக்கு மிடையில்பிளவு ஏற்படுத்த முயல்வதாகவும் என் மீது குற்றஞ்சுமத்தினர், இது என்மீது கூறப்பட்ட அவச்சொல் என்றுமட்டும் நான் கருதவில்லை நான் சார்ந்திருக்கும் ஐக்கிய தேசியக்கட்சிக்குஎதிரா கூறப்பட்ட குறிப்பாகவே நான் கருதினன்.

அவரது குற்றச்சாட்டுக்கு நான் பதிலளிக்க ஐந்து நிமிடங்கள் எடுத்தன இதற்கு அங்குஎழுந்த குழப்பமான நிலையே காரணம். அரசியல் அங்கஹீனம் ஏற்படக்கூடாதென்றுநான் பதிலளித்தேன்.

திரு. அமிர்தலிங்கத்தின் ஆத்திரத்திலிருந்து தமிழரசுக் கட்சியின் நோக்கத்தையும் விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருந்தது. அவர்களுக்கு மக்களின் அத்தியாவசியத் தேவையான உணவு, உடை, வாழ்க்கைச் செலவுக் குறைப்பு ஆகியவைகளிலும் பார்க்க மாவட்ட சபையே முக்கியமாக இருக்கிறது" என்று திரு. தேவநாயகம் கூறுகிருர்.

சிறுபான்மையினருள் சிறுபான்மையினராக இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விடுமோவென முஸ்லிம் மக்கள் அஞ்சுகிருர்களென்றும் இதனல் 95 சதவீதமான முஸ்லிம் மக்கள் மாவட்ட சபைகளை எதிர்க்கிருர்களென்றும் திரு. தேவநாயகம் கூறுகிருர்.

சிங்கள ஆசிரியர்களை அனுப்பும் பிரச்னை அன்று எழவில்லை என்று கூறும் திரு. தேவநாயகம் பெற்ருேர் விரும்பினல் தங்கள் பிள்ளைகளுக்கு சிங்களம் படிக்க வசதிசெய்யப்படவேண்டுமென்றும் தமது தொகுதியில் பெற்ருேர் ஆசிரியர் சங்கங்கள் சிங்கள ஆசிரியர்களை அனுப்பும்படி கேட்டிருப்பதாகவும் தாம் இதுபற்றி கல்வியமைச்சரிடம் தெரிவித்திருப்பதாகவும் கூறுகிருர், சிங்களம் படிக்க விரும்புவோர்களை தடுக்கக்கூடாது என்றும் அவர் சொல்கிருர்.

மட்டக்களப்பில் திரு. இராசதுரை வெற்றிபெறுவதற்குத்தாமும் முக்கிய காரணமென்றும் திரு. தேவநாயகம் தமது நீண்ட கடிதத்தில் கூறியுள்ளார்.

### கருத்தரங்கு

திருநெல்வேலி, செவ்வாய் அஞ்சல் தொடர்புசேவையாளர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையின் ஆதரவில் இன்று தொடக்கம் ஓர் கருத்தரங்கு நடைபெறவுள்ளது. 'யூனியன்' வாடிவீட்டில் இன்று காலை கருத்தரங்கை வடமாகாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா ஆரம்பித்து வைப்பார். தொழிற்சங்க இயக்கவளர்ச்சி பற்றி திரு. கென் சச்சின்சன் இன்று ஓர் விசேஷ சொற்பொழிவாற்றுவார்.

இக்கருத்தரங்கு அடுத்த மாதம் 1-ந் திகதி வரை தொடர்ந்து நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

### மனைவியின் பல்லை உடைத்தாராம்

திருநெல்வேலி, செவ்வாய் மனைவியின் பல்லை உடைத்தார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார் ஒருவர். இச்சம்பவம் நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் கொட்டடியைச் சேர்ந்த ஆறுமுகம் கிருஷ்ணபிள்ளை என்றநபர் அவரது மனைவியின் பல்லை திறப்பொன்ருல் அடித்து விழுத்தினர் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் குற்றத்தடுப்புப் பொலிஸ் பகுதியினர் இவரைக் கைது செய்து யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்தார்கள்.



### அந்தியெட்டி அழைப்பு



பிரபல வர்த்தகரும் முன்னைநாள் கெக்கிருவ பட்டினசபை தலைவருமாகிய காலஞ்சென்ற M. T. செல்லையா அவர்களின் அந்தியெட்டியும், இல்லக் கிரிகைகளும் 29-11-66 செவ்வாய்க்கிழமை நடைபெறும். மேற்படி வைபவத்தில் பங்கு பற்றும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்

திருமதி M.T. செல்லையாவும் பிள்ளைகளும்.

46, பிறவுன் ரோட், யாழ்ப்பாணம். 1042

எதிர்பாருங்கள்

ஈழநாடு கலைவிழா

விரைவில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்

'ஈழநாடு' சைக்கிள் ஓட்டப்போட்டியும், கலைவிழாவும் ஒரே தினத்தில் நடைபெறும்



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org